# வெள்ளி மலை






வலி.தெற்கு பிரதேச சபை

பொது நூலகம்,

சுன்னாகம்.

2019

# வெள்ளி மலை

## இதழ் : 14

வலி.தெற்கு பிரதேச சபை
பொது நூலகம்,
சுன்னாகம்.
2019.

| | | |
|---|---|---|
| சஞ்சிகை | - | வெள்ளிமலை |
| வெளியீடு | - | வலி. தெற்கு பிரதேச சபை<br>பொது நூலகம்<br>சுன்னாகம். |
| பதிப்பு | - | 2019 |
| பக்க அளவு | - | A5 |
| பக்கம் | - | 60 |
| எண்ணிக்கை | - | 150 |

| | | |
|---|---|---|
| Magazine | - | Vellimalai |
| Published by | - | Vali.South Pradesiya Saba<br>Public Library<br>Chunnakam. |
| Edition | - | 2019 |
| Size | - | A5 |
| Pages | - | 60 |
| Number of Copies | - | 150 |

## பொருளடக்கம்


| | |
|---|---|
| 1. வலிகாமம் தெற்கு பிரதேசத்தில் | 4 - 10 |
| 2. இயற்கையும் நாமும் | 11 |
| 3. சிறுவர்களிடையே வாசிப்பு | 12 - 16 |
| 4. இன்றைய உலகில் சிறுவர்களின் | 17 - 18 |
| 5. வாசிப்பே நல்ல | 19 - 20 |
| 6. விடியலைத்தேடி | 21 |
| 7. நூலும் நூலகமும் | 22 |
| 8. சிறுவர் துஸ்பிரயோகம் | 23 - 25 |
| 9. நூலக கையேடு | 26 - 27 |
| 10. வாசிப்புப் பழக்கமும் | 28 - 31 |
| 11. வளரும்போதே | 32 - 39 |
| 12. இன்றைய காலகட்டத்தில் | 40 - 41 |
| 13. மரபு வழியான கலைப் பொக்கிஷங்களை | 42 - 44 |
| 14. 1978ம் ஆண்டின் | 45 - 50 |
| நிகழ்வுகளின் படங்கள் | 51 - 54 |
| விளம்பரங்கள் | 55 - 60 |

## வலிகாமம் தெற்கு பிரதேசத்தில் சுமைதாங்கிக்கற்கள் ஓர் வரலாற்றுப்பார்வை.

சுமைதாங்கிக்கற்கள் இவை யாழ் குடாநாட்டில் வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி போன்ற பிரதேசங்களில் பிரதான வீதியோரங்களிலும், கிளைவீதிகளிற்கு அருகிலுள்ள சந்திகளிற்கு அருகாமையிலும் பரவலாக காணப்படும் மிகப்பழமையான ஓர் மரபுரிமைப் பொருளாகும். நீள்சதுர வடிவமாக சற்று உயரமாக தட்டையான மேற்பரப்புடையதாக அமைக்கப்பட்டிருக்கும் இக்கற்கள் பாரிய மரங்களுக்கடியில் மடம், கிணறு, தொட்டி, கேணி ஆவுரஞ்சிக்கல் என்பவற்றோடு இணைந்ததாகக் காணப்படும். முற்காலத்தில் ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்திற்கு பிரயாணம் மேற்கொள்வோர் தாம் சுமந்து வரும் சுமையினை இக்கற்களின் மேல் இறக்கி வைத்து களைப்பாறிச் செல்வர்.

ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு பிரயாணம் செய்வோர் தங்கி நின்று களைப்பாறுவதற்காக மடமும் நீண்ட தூரம் நடைப்பயணம் மேற்கொள்வோரும் மாட்டுவண்டியில் பயணம் செய்வோரும் தாகசாந்தி செய்வதற்கு கிணறும் அமைக்கப்பட்டது. மேய்ச்சல் முடிந்து வரும் கால் நடைகள் வண்டில் மாடுகள் என்பன நீர்பருகுவதற்காக கேணி தொட்டி என்பனவும் அமைக்கப்பட்டன. மாடுகளிற்கு ஏற்படும் தினவு எனும் ஒரு வகைக் கடியை போக்குவதற்கு (இவற்றில் உரஞ்சுவதன் மூலம்) ஆரவுஞ்சிக்கல் அமைக்கப்பட்டது.

இன்று பல இடங்களிலும் கவனிப்பாரற்று மிகவும் தூர்ந்த நிலையிலும், சிதைந்த நிலையிலும் காணப்படும் சுமைதாங்கிக்கற்கள் பண்டைய காலத்தில் அமைப்பிலும், அமைவிடத்திலும், சமூகப் பயன்பாட்டிலும் அந்தஸ்திலும் உயர்நிலையில் இருந்த ஓர் அமைப்பாகும். இவை அமைக்கப்பட்ட இடம் பொருட்களை பண்ட மாற்று செய்யும் வணிகப்பிரதேசங்களாகவும் மக்கள் ஒன்று கூடும்

நகரமயப்பட்ட பிரதேசமாவும் இருந்திருக்கின்றன.

சுமைதாங்கிக்கற்கள் சமூகப்பண்பாட்டில் பொதுவாக ஓர் ஞாபகச்சின்னமாகவே அமைக்கப்பட்டிருக்கிறது. அதாவது கர்ப்பிணிப் பெண்ணொருவர் குழந்தை பிரசவிக்காது இறந்திருந்தால் அப்பெண்ணின் சுமையினை இறக்கிவைக்கும் பொருட்டு அவளது ஞாபகார்த்தமாக பெயர் பொறிக்கப்பட்டு உறவினர்களால் இது அமைக்கப்பட்டது. சிலவற்றில் வேல், சூலம் போன்ற குறியீடுகளும் பொறிக்கப்பட்டன. குறித்த பெண்ணின் இறந்த நாளில் சுமைதாங்கிக்கருகில் சமயக்கிரிகைகளை மேற்கொள்வது இன்னும் சில இடங்களில் அவதானிக்கப்படும் நிகழ்வாக உள்ளது. சமூகத்தில் உயர்மட்டத்திலிருந்த செல்வந்தர்கள், பரோபகாரிகளாலும் பொது நோக்கத்தின் அடிப்படையில் மக்கள் பயன்பாட்டிற்காக இவை அமைக்கப்பட்டிருப்பதையும் சிற்சில இடங்களில் அவதானிக்கலாம். சுமைதாங்கிக்கற்கள் இடஅமைப்பு, மக்களின் சமூகப்பழக்க வழக்கம், பயன்பாடு அமைப்பாளர்களின் பொருளாதாரவசதி, அந்தஸ்து என்பவற்றுக்கேற்ப பல்வேறு வடிவங்களில், பருப்பங்களில், அளவுகளில் அமைக்கப்பட்டுள்ளன.

பிற்காலத்தில் போக்குவரத்திலேற்பட்ட விரைவான அபிவிருத்தி சுமைதாங்கிக்கற்களின் பயன்பாட்டினை குறைத்து முற்றாக கவனிப்பாரற்று கைவிடப்படும் நிலையினை ஏற்படுத்தி விட்டன. மழை, வெயில் போன்ற இயற்கைத்தாக்கங்கள் துர்வடைதலுக்கும், சிதைவடைதலுக்கும் வழி வகுத்தன. இன்று வீதி அபிவிருத்திப்பணிகள், மின்வினியோக மார்க்கம் அமைத்தல், தொலைபேசிக்கம்பங்கள் நாட்டல் சுற்று மதில் அமைத்தல் மற்றும் பல்வேறு அபிவிருத்திச் செயற்பாடுகள் இதன் முக்கியத்துவம் உணரப்படாமை, பராமரிப்பின்மை காரணமாக பல இடங்களில்

முற்றாக அகற்றப்பட்டும் சில இடங்களில் பகுதியளவில் அழிவடைந்தும் காணப்படுகின்றன.


தற்போது யாழ்ப்பாணத்தில் காணப்படுகின்ற சுமைதாங்கிக் கற்கள் 300இலிருந்து 200 வருடங்கள் பழைமையானதாகக் காணப்பட்டாலும் பழந்தமிழ் இலக்கியக் குறிப்புக்களின் படி சுமார் 2500 வருடங்கள் பழைமையான வரலாறு இவற்றுக்குண்டு, வரலாறு நெடுகிலும் சோழராட்சிக்காலம், யாழ்ப்பாண இராச்சியகாலம் முழுவதும் இவை அமைக்கப்பட்டிருந்ததற்கான சான்றுகள் பல உண்டு. எனினும் ஐரோப்பியர் வருகையின் பின் குறிப்பாக போர்த்துக்கேயர் காலத்தில் இவை அழிவுக்குட்பட்டிருக்கலாம். தற்போது உள்ள சுமைதாங்கிக்கற்கள் ஒல்லாந்தர் ஆட்சியின் பிற்காலத்திலும் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்திலும் மீளக்கட்டப் பட்டிருக்கின்றன.

வலிகாமம் தெற்குப்பிரதேசத்தில் சுன்னாகம், கந்தரோடை, ஏழாலை, சங்குவேலி ஆகிய நான்கு இடங்களில் இச்சுமை தாங்கிக்கற்களை அவதானிக்கலாம்.

**01. சுன்னாகம்**


சுன்னாகத்திலிருந்து புத்தூர் செல்லும் வீதியில் வீதியோரத்தின் தெற்குப்பக்கத்தில் கதிரமலை சிவன் கோவில் வளாகத்தினுள் அமைந்துள்ளது. 200 வருடங்கள் பழைமையுடையதாக இக்கல் உள்ளது. கல்லின் சுமை வைக்கும் பகுதி சமதளமாக உள்ளது. இதில் எவ்வித எழுத்துக்களோ குறியீடுகளோ காணப்படவில்லை. முற்காலங்களில் புத்தூர், நீர்வேலி, புன்னாலைக்கட்டுவனில் இருந்து சுன்னாகம், கந்தரோடைக்கு செல்வோர் தமது பொருட்களை இவ்விடத்தில் இறக்கி வைத்து களைப்பாறிச் செல்வர். பிற்காலத்தில்

யோகர் சுவாமிகள் இவ்விடத்தில் அமர்ந்திருந்து ஆலயதரிசனம் செய்ததாகக் கூறப்படுகிறது. முன்பு சிதிலமடைந்திருந்த இக்கல் அதன்தன்மை மாறாதவாறு புனரமைக்கப்பட்டு கல்லின் மேல் யோகர் சுவாமிகளின் சிலை நிறுவப்பட்டு பாதுகாக்கப்பட்டுள்ளது.



**02. கந்தரோடை**

**சுன்னாகம் மாசியப்பிட்டி வீதியில் கந்தரோடை வற்றாக்கை அம்மன் ஆலயத்திற்கு அருகாமையில் அரச மரத்தினடியில்** அமைந்துள்ளது. இத்துடன் இணைந்ததாக கேணி, ஆவுரஞ்சிக்கல் என்பன காணப்படுகிறது. இச்சுமைதாற்றிக்கல்லில் எவ்வித எழுத்துக்களோ குறியீடுகளோ இல்லை அளவில் பெரிதாக உள்ள இக்கல்லின் நடுப்பகுதி உயர்த்தப்பட்டு இருபக்கமும் சற்றுத்தாழ்வாக சமதளமாக உள்ளது. கேணி 1834ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. 200 வருடங்கள் பழைமையுடையதாக நம்பப்படும் இக்கல்லினை பாதுகாப்பதற்கு வலிகாமம் தெற்கு பிரதேசசபையும், தொல்லியல் திணைக்களமும் இணைந்து நடவடிக்கை எடுத்துள்ளன.



03. ஏழாலை


மல்லாகத்திலிருந்து புன்னாலைக்கட்டுவன் வடக்கிற்கு செல்லும் வீதியில் தேவிகோவிலுக்கு அருகாமையில் முச்சந்தியடியில் ஆலமரவிருட்சத்தினடியில் அமைந்துள்ளது. அளவில் நடுத்தரமுடைய இக்கல் சமதளமாகவுள்ளது. இக்கல்லில் பொறிக்கப்பட்டுள்ள எழுத்துக்கள் கல் சிதிலமடைந்துள்ளதால் தெளிவில்லாமல் உள்ளது.



இச்சுமைதாங்கிக்கல் கர்ப்பிணிகளாகவிருந்து குழந்தை பிரசவிக்காது இறந்த செல்லம், முத்து என்ற இரண்டு பெண்களின் நினைவாக அவர்களது உறவினர்களால் அமைக்கப்பட்டது. இதனை அமைத்தவர்களது பரம்பரை வழி உறவினர்கள் இப்பொழுதும் ஏழாலையில் வசிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**04. சங்குவேலி**

உடுவிலிலிருந்து சண்டிலிப்பாய் செல்லும் டச் (Dutch Road) வீதியில் சங்குவேலி அருள்ஞானப்பிள்ளையார் ஆலயத்திற்கு அருகாமையில் வடக்கு பக்கத்தில் அமைந்துள்ளது. படி போன்ற அமைப்பினை உடையது. சின்னையா உபயம் என எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளது முன்பு இதற்கருகாமையில் மடம் ஒன்று இருந்தது தற்போது இல்லை. 200 வருடத்திற்கு முன் வாழ்ந்த சின்னையா என்ற பரோபகாரரினால் இச்சுமைதாங்கிக்கல்லும், மடமும் அமைக்கப்பட்டதாக இவ்வூரில் வசிப்போர் கூறுகின்றனர். உடுவில், மானிப்பாயிலிருநது சங்கானை, சுழிபுரம், வட்டுக்கோட்டை செல்வோர் இக்கல்லைப் பயன்படுத்தியுள்ளனர்.



**மறைந்துவிடப்பட்ட சுமைதாங்கி கற்கள்**

இவற்றை விட மேலும் சில இடங்களில் முன்பு இக்கற்கள் இருந்ததாக இதனை நன்கு அறிந்த வயதில் மூத்தோர் கூறுகின்றனர். காங்கேசன்துறை யாழ்ப்பாண பிரதான வீதியில் தற்போதைய மருதனார்மடம் சந்தையை அண்மித்ததாக ஓர் சுமைதாங்கிக்கல், கிணறு, தொட்டி, ஆவுரஞ்சிக்கல் இருந்தது. அதேபோன்று புன்னாலைக்கட்டுவனில் புத்தூர் அச்செழு செல்லும் வீதியில் வைரவர் ஆலயத்தின் அருகாமையில் ஓர் சுமைதாங்கிக்கல் இருந்தது.

எனினும் தற்போது இவை காலமாற்றத்தினூடு மறைந்து விட்டன.

ஏழாலைச்சந்தியில் தற்போது உதயசூரியன் சனசமூக நிலையம் இமைந்திருக்கும் பகுதிக்கண்மையில் முன்னர் ஓர் சுமைதாங்கிக்கல், கேணி, மடம் என்பன அமைந்திருந்தன எனினும் தற்போது இவைஇல்லை.

இன்று ஓர் மரபுரிமை எச்சமாக மாறிவிட்டிருக்கும் இக்கற்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டில் மட்டுமே காணப்படக்கூடிய தொட்டுணரத்தக்க கலாச்சார மரபுரிமைச் சொத்தாகும் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே எமக்கான ஓர் சமூகப் பெறுமதி, சமூக உள்ளடக்கம், கலாச்சாரப் பெறுமதி ஆகிவற்றை இச்சுமை தாங்கிக்கற்கள் வழங்குவதால் இவற்றினை பேணிப்பாதுகாக்க வேண்டியது அத்தியாவசியமாகின்றது. அவற்றின் தன்மை, வடிவம் மாறாதவாறு புனரமைத்தல் அபிவிருத்தியின் போது தவிர்க்க முடியாத காரணங்களிருப்பின் அவற்றிணைப் பெயர்த்தெடுத்து வேறிடங்களில் நிறுவுதல், வர்ணம் பூசுதல், சமூகப் பெறுமதி மிக்க ஓவியங்கள், சிற்பங்களை இக்கற்களின் மேல் அமைத்தல் ஆகியவற்றின் மூலம் இவற்றினை உயிர்ப்பாகப் பாதுகாக்கலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

**உசாத்துணை நூல்**

01. யாழ்ப்பாண வாழ்வியல் வரலாற்றுத்துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - 2012

02. பிரதேசமக்களிடம் நேரடியாகப் பெறப்பட்ட வாய்மொழி மூலத்தகவல்கள்.

ஆக்கம்
சண்முகலிங்கம் சஜீலன்
சுன்னாகம்.

# இயற்கையும் நாமும்

காலையில் பூபாளம்
காற்றோடு கலந்திட
கண்விழித்து ஒரு தரம்
கள்ளமற்று நோக்கம்மா

கல்தோன்றி மண்தோன்றி
படிப்படியாய் நீ தோன்றி
உன் பின்னே தொடர
தோன்றிய மானிடமும்
நாம் அல்லோ!

மண்ணில் கால்மிதித்து
பரதம் ஆடியபோதும் - பூமித்தாயே
உனை வணங்க மறந்ததில்லை
விண்ணைத் தொடச் சென்ற போதும்
உன் பாதம் பணிந்து
செல்ல மறக்கவில்லை

ஆனபோதும் நீ சீற்றம்
கொள்வது ஏன்? ஓ சற்றுப் பொறு
புரிகிறது இன்று மானுடம்
உன் மீது எல்லை தாண்டி
சீண்டி விட்டதா?

மனிதர் உள்ளம் எல்லாம்
இன்று ஒரே எண்ணமாகும்
அந்த எண்ணம் ...............
உனக்கு எதிராக இருக்கிறது

இயற்கை அன்னையே
நீ அறியாதவள் அல்ல
ஆகவே தான் மழையாக
சீற்றம் கொள்கிறாயோ........!

மானுடா ......... புரிந்து கொள்
காற்று உன் பக்கம்
வீசினால் தான்
நதியில் உன் படகுகள்
நளினமாகச் செல்ல முடியும்.

யா/யூனியன் கல்லூரி
ப. கபிலன் (A/L)

# சிறுவர்களிடையே வாசிப்பு பழக்கத்தை மேம்படுத்துவோம்.....

நவீன கல்வியில் வலியுறுத்தப்படும் சுயகற்றல் கற்பதற்காக கற்றல் தேடிக்கற்றல் பாடம் தவிர்ந்த அறிவுக்கற்றல் முதலியவற்றை வளமுடன் முன்னெடுப்பதற்குரிய வாயில்களை நூலகங்கள் ஏற்படுத்துகின்றன. இன்றைய கல்விச்சமுதாயத்தில் ஆசிரியரின் கற்பித்தலுக்கு மேலாக மாணவர் அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டியது அவசியமாகிறது. அறிவு என்பது தேடலின் விளைவாகும். தேடல் என்பது ஆய்வின் படியாகும். இவ்வாறு வாழ்வில் தேடுதல் மூலம் அறிவைப் பெருக்கி புதிய விடயங்களை ஆராய்ச்சி செய்து வெற்றி பெறுகின்றனர். அறிவின் துரித வளர்ச்சியும் அளவிட முடியாத அறிவுப் பெருக்கமும் இன்றைய சமூகங்களை அறிவு பொருளாதாரமாகவும் நிறுவனங்களை அறிவுசார் ஊழியர்களாகவும் மாற்றியுள்ளன.

கைத்தொழில் புரட்சி, பசுமைப்புரட்சி போன்று 21ம் நூற்றாண்டில் அறிவுப்புரட்சி ஏற்பட்டு வருதாக வலியுறுத்தப் படுகிறது. அந்தவகையில் நூல்நிலையங்கள் தகவல்களின் இருப்பிடமாக விளங்கி மக்களுக்கும் அதனைநாடி வருவோர்க்கும் புதிய அறிவை வழங்கி வருகிறது. இதனால் அவற்றை அறிவாலயம், அறிவுத் திறவுகோல், அறிவு தாபனம் என கூறுகிறார்கள். இந்த உலகில் வளர்ந்து வரும் நம் குழந்தைகளும் பிரவகிக்க வேண்டும். தொடர்ந்து பயணிக்க வேண்டும் என்ற ஆசை அனைத்துப் பெற்றோர்களுக்கும் உண்டு. நம்மைப் போலல்லாமல் நமது அடுத்த சந்ததியினரின் தகவலை பெற்றுக் கொள்ளும் வேகம் தேடலுடன் கூடிய ஆர்வம் அதிகமாக உள்ளது. ஆனால் அதற்குரிய வழிகாட்டல் சரியாக அமைய வேண்டும் என்பதே எனது நோக்கம்.

**"தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தற்கு கற்றனைத்தூறும் அறிவு", "கண்டதும் கற்க பண்டிதனாவான்"** என்றெல்லாம் நமது முன்னோர்கள் கல்வியின் அவசியம் பற்றி பொன்மொழிகளை கூறியிருக்கிறார்கள். ஒருவர் எவ்வளவு தூரம் புதிய விடயங்களை வாசித்து வருகிறாரோ அவ்வளவிற்கு அவரது அறிவும் விருத்தியடையும் என்பது உண்மை. இப்படியான வாசிப்பு பழக்கத்தால் ஏற்படும் கல்விவளர்ச்சி மனிதனை பூரணத்துவம் மிக்க மனிதனாக மாற்றுகின்றது. இதனையே வாசிப்பதால் மனிதன் பூரணத்துவம் அடைகிறான் என்கின்றோம். ஆனால் அக்கூற்றில் பொதிந்துள்ள ஆழமான உண்மையை நூல்களை வாசித்து பெறப்படும் அனுபவம் மூலமே உணரமுடியும்.

நூல்கள் வாசிக்க தவறியவன் அறிவு தூசுபடியும் பெட்டகம் போல வர்ணிக்கப்படுகிறது. வாசிப்பு பழக்கம் ஒரு மனிதனது அறிவு, உடல், உள நலத்தை மட்டுமன்றி ஆன்மிக நலத்தினையும் பேண வழிவகுக்கும். கல்வியில் உயர்ந்த மனிதர்கள் பலர் தம் வாசிப்பு பழக்கத்தினாலேயே வாழ்வில் உயர்ந்த நிலையை அடைந்துள்ளனர். ஆபிரகாம்லிங்கன், மகாத்மகாந்தி, அப்துல்கலாம் போன்றோரின் வாழ்க்கை வரலாற்றில் அவர்கள் நூல்கள் வாசிப்பதற்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்தார்கள் என அறிய முடியும். உங்களிடம் ஒரு கோடி ரூபாய் பணம் இருந்தால் என்ன செய்வீர்கள் என்று வெளிநாட்டு தலைவர் ஒருவர் மகாத்மகாந்தியிடம் கேட்டபோது பெரிய நூலகம் ஒன்று அமைப்பேன் என பதிலளித்தாராம் இதிலிருந்தே அவர் நூல்களிற்கு அளித்த முக்கியத்துவத்தினை அறிந்து கொள்ளலாம்.

இன்றைய நவீன தொழினுட்ப உலகில் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை இலத்திரனியல் சாதனங்களுடனேயே பொழுதுபோக்கை கழிக்கின்றனர். வளர்ந்து வரும் சமுதாயத்தில்

நூல்களை வாசிக்கும் திறன் குறைந்து கொண்டே போகிறது. நூல்களை வாசிக்கும் திறனை தவறவிட்டவர் தன் வாழ்க்கையை யோசிக்க தவறிவிடுகிறான் என்கிறார் நூலகவியலின் தந்தை. எனவே எதிர்கால சந்ததியினரிடம் வாசிப்பு பழக்கத்தை மேம்படுத்த வேண்டியது நூலகம் சார்ந்த அறிவுடையோரின் கடமையாகும். இதற்கான ஆரம்ப படியாக பெற்றோர்கள் அவர்களின் குழந்தைகளை சிறுவயதிலேயே நூல்களுடன் ஈடுபடுத்தல் அவசியமாகும்.

ஒருவயது நிறைந்த குழந்தையால் படங்கள், ஒலிகள் மூலம் கூறப்படும் கருத்தை விளங்கிக்கொள்ள முடியும் என்கிறது குழந்தை உளநல மருத்துவம். நல்ல பழக்கத்தையும் ஆரம்பிக்க சிறந்த பருவம் இளமைப்பருவமே ஆகும். அவ்வாறு ஏற்படுத்தப்படும் ஆர்வம் வாழ்க்கை காலம் முழுவதும் தொடரும் என்பதில் ஐயமில்லை. இதனையே "**தொட்டில் பழக்கம் சுடுகாடு வரைக்கும்**" வீடுகளில் குழந்தைகளிற்கு நிறப்படங்களுடன் கூடிய கவர்ச்சியான புத்தகங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் புத்தகங்களைக் காட்டி அவர்களுக்கு சிறிய எளியநடைக் கதைகளை கூறுவதன் மூலமும் நூல்களில் ஆர்வத்தை ஏற்படுத்தலாம். பாடசாலை நூலகங்கள், சனசமூக நிலையங்கள், பொதுநூலகங்களில் சிறுவர் வாசிப்பு பகுதி என்பன ஒதுக்கப்பட்டுள்ளது.

வாரம் ஒரு தடவையாவது குழந்தைகளை நூலகத்திற்கு அழைத்துச் செல்லல் அவசியமாகிறது. அது அவர்களுக்கு புதிய சூழலுடன் இணைவதற்கும், புத்தகங்களை கையாளப் பழகுவதற்கும் இலகுவாக அமையும். வாசிப்பு பழக்கம் என்றும் ஒருவரின் பிறப்புடன் கூடியதல்ல. நீந்துதல், நடத்தல், விளையாடுதல் போன்ற பயிற்சி செய்யச்செய்ய விருத்தியடையும் ஆற்றல் ஆகும். ஆரம்பத்தில் மெதுவாக வாசித்தாலும் தொடர்ச்சியாக வாசிக்கும்போது அவர்களே விரைவான வாசிப்பிற்கு பழகிக் கொள்வர். வாசித்து அதன் கருத்தையும் அதன் பொருளையும் விளங்கிக் கொள்வர்.

சிறுவர்களின் வாசிப்பு பழக்கத்தின் மூலம் அவர்களிடம் அறிவு, மொழியாற்றல், எழுத்தாற்றல், இலக்கண இலக்கியம், கவிதைநயம், சிந்திக்கும் திறன், நினைவாற்றல், கற்பனைத்திறன் என்பன விருத்தியடையும் பின்னர் அவர்கள் பாடசாலைப் பருவத்திலும் தங்களின் பாடசாலை நூல்களை வினைத்திறனாக பயன்படுத்து வார்கள். பாடநூல்களையும் ஆர்வத்துடன் கற்றுக் கொள்வார்கள். இவ்வகை துறைகளில் ஈடுபாடு ஏற்படும்போது இளைஞர்கள் வழிதவறுதல், போதைவஸ்துக்கு அடிமையாதல், சமுதாய சீர்கேடுகள் ஏற்பட வாய்ப்பளிக்காது, நல்ல ஒரு சமூகத்தை கட்டியெழுப்ப முடியும். இன்றைய மாணவர்கள் பாடக் கற்கையிலும் பரீட்சை நோக்கத்தையுமே கொண்டு இருக்கிறார்கள். அதைத்தவிர பொது விடயங்கள், பெரியோர்களின் வாழ்க்கை வரலாறுகள், உலகஅறிவு, எமது காலாசார பண்புகள் பற்றி அறிந்திருப்பது அவசியமாகும். நூலகங்களில் நடைபெறும் தேசிய வாசிப்பு மாத போட்டிகள், புத்தக கண்காட்சிகள், சித்திரப்போட்டிகள், விமர்சனக் கட்டுரை எழுதுதல் போன்றவற்றில் மாணவர்கள் பங்கேற்க வேண்டும். உங்கள் வயதிற்கு ஏற்ற நூல்களை வாசிக்கும் போது உள்ளம் புத்துணர்ச்சியடையும், உள்ளங்களை விளங்கி அறிவை வளர்த்துக் கொள்வதன் மூலம் நீங்களும் பூரணத்துவம் அடைவீர்கள். சிலர் எல்லாவகையான நூல்களையும் மேலோட்டமாக வாசிப்பார்கள் அவர்களிடம் பரந்துபட்ட அறிவு காணப்படும். சிலர் தமது விருப்பமான துறையில் நிறைய நூல்களை வாசித்திருப்பார்கள். அவர்கள் குறிப்பிட்ட துறையில் பாண்டித்திய அறிவு பெற்றிருப்பார்கள்.

வளர்ச்சியடைந்த நாட்டு நூலகங்களில் சிறுவர்கள் பகுதி தனியாக ஒதுக்கப்பட்டு அவர்களை கவரும் வகையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது மட்டுமல்லாமல் அங்கு பணியாற்றும் நூலக உதவியாளர்கள் சிறுவர்களை அழைத்து நூல்களை வாசித்து கதைகள் பாட்டுக்கள் என விளக்கம் சொல்லிக் காட்டுவார்கள்.

அது குழந்தைகளை நூலகத்திற்கு செல்ல தூண்டுவதும் வாசிப்பு ஆர்வத்தையும் ஏற்படுத்தும் அந்த வகையில் நம்நாட்டில் முன்பள்ளிகளுடன் இணைந்த சிறுவர் நூலகம் அமைக்கப்பட வேண்டியது அவசியமாகின்றது. சிறுவர்களுக்கு வாசிப்பு பழக்கத்தை ஏற்படுத்துவதில் முன்பள்ளிகளும் கூடிய முக்கியத்துவம் பெறுகின்றன. அங்கு ஏனைய கற்பித்தலுடன் நூலக வழக்கமும் ஏற்படுத்தப்பட வேண்டும். இன்றைய சிறுவர் உலகம் தொலைக்காட்சி, தொலைபேசி, இன்ரநெட் போன்ற நவீன தொழில்நுட்பத்துடன் இணைந்துள்ளது. நூலகம் தரும் தகவல்களை வலைத்தளங்களிலும் அறிந்து கொள்ள முடியும்.

ஆனாலும் நூல்களை வாசிக்கும் போது பெறப்படும் மொழியாற்றல், எழுத்தாற்றல் விருத்தியடைவதில்லை இவற்றிற்கு மேலதிகமாக கண்பார்வைக்குறைபாடு, காதுகோளாறு, மூளை விருத்தி கோளாறு போன்ற நோய்நிலைமைக்கு ஆளாகிறார்கள். இதனை அனைத்துப் பெற்றோர்களும் அறிந்திருந்தாலும் தமது வேலை இலகுவிற்காகவும் குழந்தையின் பிடியில் இருந்து தப்பிக்கொள்ளவும் குழந்தைக்கு தொலைபேசி வழங்குகின்றோம். அந்த நேரத்திற்கு பிள்ளைக்கு ஒரு புத்தகத்தை வழங்கிப்பாருங்கள் அதனையே வழக்கப்படுத்திப்பாருங்கள் நிச்சயம் உங்கள் குழந்தையை ஆரோக்கியமான நிலைக்கு இட்டுச் செல்லும்.

எங்கள் எதிர்கால சமுதாயத்தை நல்வழிப்படுத்துவதும் பேணுவதும் உங்கள் கைகளிலேயே உள்ளது. அதற்கு சிறந்தவழி பிள்ளைகளை நூல்கள் வாசிப்பதில் ஈடுபடுத்துவதும் நூல்களையும், நூலகங்களையும் பயன்படுத்த பழக்கப்படுத்துவதும் ஆகும். அதற்காக ஒவ்வொருவரும் சபதமெடுப்போம் நாட்டையும் நம் சமூகத்தையும் பாதுகாப்போம்.

ஆக்கம்
நூலகர்
திருமதி.வ.நிமலறாஜ்

# இன்றைய உலகில் சிறுவர்களின் வாசிப்புப் பழக்கம் (தேசிய வாசிப்பு மாதம் 2019 போட்டியில் முதலாம் இடம் பெற்ற கட்டுரை)

இன்றைய மாணவர்களுக்குக் கல்வி எவ்வளவு முக்கியமோ அதே போன்று வாசிப்புப் பழக்கமும் முக்கியமானது. எழுதுதல், வாசித்தல், மனதில் பதிய வைத்தல் என்பவற்றிற்கு வாசிப்புப் பழக்கம் மிகவும் முக்கியமானது.

ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதியில் இருந்து முப்பத்தோராம் திகதி வரை வாசிப்பு மாதமாக கொண்டாடப்படுகிறது. வாசிப்புப் பழக்கம் சிறுவர்களை ஊக்கப்படுத்துவதற்கும், அதன் மூலம் பரந்த அறிவை பெற்றுக் கொடுப்பதற்கும் உதவுகின்றது. வாசிப்பு என்பது ஒரு மனிதனைப் பூரணமாக்கக் கூடியது. நேற்று எவ்வளவு படம் பார்த்தீர்கள்? என்று யாரையாவது கேட்டால் எண்கணக்காண விடைகள் வரும். ஆனால் எத்தனை புதத்தகம் வாசித்தீர்கள்? என்று கேட்டால் பூச்சியம் என்ற விடை கூட வராது. இப்போது வாசிப்புப் பழக்கம் மிகவும் அரிதானதாகவே உள்ளது.

முன்னைய கால மக்கள் வாசித்து வாசித்தே பெரிய அறிஞர்களானார்கள் இதற்கு உதாரணமாக ஆபிரகாம் லிங்கன், மகாத்மாகாந்தி, அப்துல்கலாம் போன்ற அரசியல்வாதிகள் வாசிப்பின் சிகரங்களாக விளங்கினர். அதே போல கல்கி கிருஸ்ணமூர்த்தி, அகிலன், சுஜாதா போன்ற எழுத்தாளர்களும் வாசிப்பின் சிகரங்களாக விளங்கினர். இதற்கான காரணம் இவர்கள் வாசித்தறிந்த நுண் அறிவுகளே காரணமாகும். எமக்கு அனுகூலமான புத்தகங்களை மட்டுமே வாசிக்க வேண்டும். வாசிக்கும் போது கண்கள் மட்டுமோ

அல்லது வாய் மட்டுமோ வாசிக்கக் கூடாது. ஆழமாகவும், நிதானமாகவும் விடயத்தை உள் வாங்கி மனதில் பதியுமாறு வாசிக்க வேண்டும். சிறுவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக பொது நூலகங்கள், பாடசாலைகள் ஆகியவற்றில் போட்டிகளை நடாத்தி வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்படுகின்றன.

நாம் தீய புத்தகங்களை வாசிக்கக் கூடாது. அவ்வாறு வாசித்தால் நாம் தீய வழியில் சென்று விடுவோம். ஆகவே ஒவ்வொரு மனிதனும் நல்ல நூல்களை வாசிக்க ஆர்வம் காட்ட வேண்டும். திருவள்ளுவர் "**தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குத் கற்றிணைத் தூறும் அறிவு**" என்கிறார். அதேபோன்று "**கற்க கசடறக் கற்பவை கற்ற பின் நிற்க அதற்குத் தக**" எனவும் கூறுகின்றார். இதன் கருத்து என்னவென்றால் நாம் கற்கும் விடயங்களின் படி நடக்க வேண்டும் என்பதாகும். வாசிப்பு மாதமாகிய ஒக்டோபர் மாதத்தைப் பயன்படுத்தி நன்கு வாசிப்புத் திறனைக் கூட்டிக் கொள்ள வேண்டும்.

சீனி இருக்கும் இடத்தினைத் தேடி வரும் எறும்பைப் போலவும், தேன் இருக்கும் இடத்தினைத் தேடி வரும் வண்டைப் போலவும், பள்ளம் இருக்கும் இடத்தினை பார்த்துப் பாயும் வெள்ளம் போலவும், சிறுவர்களாகிய நல்ல நூல்களைத் தேடிக் கற்று நாட்டின் நற்பிரஜையாக மிளிர வேண்டும்.

ஆக்கம்
பி.கம்சாயினி
தரம் - 06
யா/இணுவில் மத்திய கல்லூரி

# "வாசிப்பே நல்ல சமுதாயப் பூங்காவின் அடிப்படை"

**சி.ஜெயகாந்த், பிரதேச செயலாளர்**

**வலிகாமம் தெற்கு – உடுவில்**

SLAS - I, B.Com (Hons - 1st Class)

B.A (Hons), MA, MPA, Dip. in. pub Admin,

Spl. Trd. Maths

வாசிக்க தெரிந்த மனிதன் தன்னை முதலில் நேசிக்கத் தெரிந்தவன். நல்ல சிந்தனையாளன். நல்ல குடிமகன் (Good Citizen). இன்றைய வாசகன் நாளைய தலைவன். (Today Rader Tomorrow Leader). நல்ல வாசகங்கள் ஜனநாயகத்தின் பொக்கிஷங்கள். வாசிப்பு என்பது வெறுமனே நூல்களைப் படிப்பது மட்டுமன்றி நற்பழக்கவழக்கங்களில்(Good habits) ஒன்றாகும். இது உடலையும், உள்ளத்தையும் ஆரோக்கியமாகவும், புத்துணர்வுடன் வைத்துக் கொள்கின்றது.

ஒரு மனிதனின் அறிவுப் பசியை தீர்த்து வைப்பது வாசிப்பு, வாசிப்பு, வாசிப்பு............ அதாவது மனிதனின் அறிவுத் தேடலுக்கு வாசிப்பு ஒன்றே தீனியாகும். ஒரு வளமான மனித வாழ்வுக்கு அரிச்சுவடே வாசிப்பு என்றால் அது மிகையானதல்ல. இவ் அரிச்சுவடே பின்னர் அகராதியாக மிளிர்கிறது. ஒவ்வொரு மனிதனும் உண்மையான பேரின்பத்தை நூல்களின் பக்கங்களைப் புரட்டி, புரட்டி வாசிக்கும் போது பெறுகிறார்கள்.

ஆதி காலத்தில் மனிதன் விலங்குகள் போல காடுகளிலும், குகைகளிலும் வாழ்ந்து வந்தான். அவன் தன் உணவுத் தேவைக்காக விலங்குகளை வேட்டையாடி உண்டு வந்தான். அவன் தன் உணர்வுகள், உணர்ச்சிகள் எண்ணங்களை வெளிப்படுத்த மொழி அவசியம் என்பதை உணரவில்லை. மொழியின் அவசியத்தை என்று உணர்ந்தானோ அன்றே மனித குலத்தின் முதல் எழுச்சியாகும். முதலில் மொழிக்கு ஒலியையும், பின்னர் எழுத்துரு அல்லது வரிவடிவத்தை கோடுகள், படங்கள் மூலம் வழங்கினான். மனிதன் நாகரீகம் அடைய பட்டறிவு, கற்றறிவு என்பதை மற்றவர்களும் பயன்படும் வகையில் அச்சுருவாக நூல்களாக உருப்பெற்றன. நூல்களின் வருகையே வாசிப்பின் தோற்றமாகும். இவ் வாசிப்பே மனித அகக்கண் திறவுகோல் ஆகும். வாசிப்பு என்பது மனித அறிவை செதுக்கும் உளி போன்றது.

பத்துமாதச் சிசுவைச் சுமந்த ஒரு தாய், சுகப்பிரசவம் முடிந்த பின் எவ்வளவு மகிழ்ச்சி அடைவாளோ, அத்தகைய மகிழ்ச்சியைத் தருவது வாசிப்பு. மாறாக காட்சி ஊடகங்கள் மூலம் கிடைக்கும் தகவல்கள், செய்திகள், அறிவியல்கள் என்பன அறுவைச் சிகிச்சை மூலம் நடைபெற்ற பிரசவம் போன்றது. அதாவது காட்சி ஊடகங்களால் உடல் ரீதியான பாதிப்பு முதலில் ஏற்பட்டு அதனைத் தொடர்ந்து உளரீதியான பாதிப்பு ஏற்படும். இன்றைய கணனி யுகத்தில் காட்சி ஊடகங்கள் மூலம் நம் புலனுக்கும் உணர்வுக்கும் விருந்தளிக்கப்படுகின்றது. ஆனால் நூல்கள் ஊடான வாசிப்பு மூலமே அறிவுக்கு விருந்தளிக்க முடியும். நூல்களை வாசிக்க வேண்டிய இன்றைய இளைய தலைமுறைகள் "**முகநூலில்**" (Face Book) மூழ்கி இருப்பது வருத்தத்தை அழிக்கிறது. இன்று எம்மை பல விதமான நோய்கள், தீய பழக்கவழக்கங்களுக்கு இட்டுச் செல்வது இன்றைய "**பலவகை காட்சி**" ஊடகங்கள் (Virtual Media)ஆகும். எனவே நல்ல நூல்களை நோக்கிச் சென்றால் நோய்கள் நெருங்காது.

மனிதன் கடந்தகால வரலாற்றை அறியவும், நிகழ்காலத்துடன் ஒப்பிடவும் - ஒத்து வாழ்வதற்கும், எதிர்காலத்தை சிந்தித்து வாழ்வதற்கும் வாசிப்பு இன்றியமையாத அகராதி. இவ் வாசிப்பு மூலம் தான் வாழ்கின்ற காலத்தில் வெற்றிகரமான மனித வாழ்வை வாழவும், நிகழ்காலத்திலும்-எதிர் காலத்திலும் சிறந்த மனித வளமாகவும் - வழிகாட்டியாகவும் விளங்க முடியும்.

வாசிப்பு ஒரு மனிதனை பூரணமானவன் ஆக்கின்றது. கடந்த காலங்களையும், வரலாறுகளையும் எடுத்து நோக்குகையில் சிறந்த அறிஞர்கள், கவிஞர்கள், நாவலாசிரியர்கள், விஞ்ஞானிகள், புரட்சியாளர்கள், வரலாற்று ஆசான்கள், மாமேதைகள் போன்றோர் சிறந்த வாசகர்களாகவே இருந்துள்ளார்கள். மனித மனங்களில் புத்துணர்வுப் பூங்காவை மிளிர வைப்பது வாசிப்பே ஆகும். இவ்வாறு நல்ல வாசகர்கள் உடைய சமூகம் நல்ல சமுதாயப் பூங்கா ஆகும். இதுவே ஒரு பண்பட்ட சமுதாயத்தின் அடையாளம் ஆகும்.

# விடியலைத் தேடி............

தொடங்கும் இந்தப் பொழுதினில்
சிறக்கும் இந்தப் புவிதனில்
பிறக்கும் இந்த உலகினில்
மாறும் இந்த காலத்தில்
விடியுமா? இந்த நொடிதனில்

மாற்றங்களின் மத்தியில்
மாறுதல்களின் சந்தியில்
தோற்றத்தின் எழுச்சியில்
சீற்றத்தின் கொடுமையில்
விடியலும் உண்டோ?

ஏழையின் பிழைப்பிலும்
இடர்களின் இடையிலும்
சறுக்கும் பாதையிலும்
பூக்கும் பூவிலும்
தொடருவது விடியலே.

காலங்கள் மாறினாலும்
கண்டங்கள் கடந்தாலும்
மாற்றங்கள் நடந்தாலும்
மாறுதல்கள் நிகழ்ந்தாலும்
விடியலைத் தேடி.

ஆக்கம்
ப. வனஜா
யாழ். பல்கலைக்கழகம்

# நூலும் நூலகமும்

பள்ளத்தை நிரவிச் செல்லும்
பாய்ந்தோடும் வெள்ளம் வெற்றி
உள்ளத்தை நிரவிச் செல்லும்
நூல்கள் அளிக்கும் கல்வி

பிள்ளைகள் அறிவுத் தேனை
பருகிடத் தந்தே உலகை
வெள்ளையாய் மாற்றுவோர் தான்
வித்தைகள் அறிந்தோர் மேன்மை

நூலக பயனால் நாட்டில்
குழந்தைகள் நிறைவைப் பெற்று
உற்பத்தி அறிவு வாழ்வில்
உடல் நல அறிவும் கண்டேன்

மற்றவர் மொழியைப் பேசி
மதிநுட்பம் உடையோராகி
நற்பயன் அடைகின்றார்கள்
நாடெலாம் திரிகின்றார்கள்

விண்வரை மனிதன் செல்ல
வைத்தது அறிவே அன்றோ
பண்ணோடு இசையும் மேவ
படைத்தவன் அறிஞன் அன்றோ

எண்ணோடு எழுத்தும் தந்தே
உலகினை சிறக்க வைத்த
புண்ணியம் எவர்க்கு- நூலகம்
புரிந்தருற் சேவைக் கன்றோ.

ஆக்கம்
ப. கிரீஜா
யாழ். பல்கலைக்கழகம்

# சிறுவர் துஸ்பிரயோகம்

இன்று உலகளாவிய ரீதியில் எதிர் நோக்கும் முக்கிய பிரச்சினைகளில் ஒன்றாக சிறுவர் துஸ்பிரயோகம் காணப்படுகின்றது. சிறுவர்கள் எனப்படுவது இருபாலினத்தவர்க்கும் பொதுவாக குறிப்பிட்ட காலம் வரையில் பயன்படுத்தப்படும் சொற்பதமாகும். பொதுவாக சிறுவர்கள் எனப்படுவோர் 18 வயதிற்கு உட்பட்டவர்கள் எனக் கூறப்படுககிறது. பிள்ளை ஒன்றின் மீது பிரயோகிக்கப்படும் உடல், உளரீதியான அனைத்துவகையான துன்புறுத்தல்களும் சிறுவர் துஸ்பிரயோகமாகும். சிறுவர் உழைப்பு, கொடுமைப்படுத்தல் பாலியல் வன்முறைகள், தீங்கினை விளைவித்தல் என பல்வேறு வழிகளில் துஸ்பிரயோகங்கள் நடந்த வண்ணமே உள்ளன எனலாம். இவை பாடசாலை, வீடு, ஆலயங்கள், வீதிகள் எனப் பல இடங்களில் நடைபெறுகின்றமையினை அவதானிக்க கூடியதாகவுள்ளது.

உண்மையில் இன்றைய காலத்தில் சிறுவர்கள் துஸ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டாலும் அதனை அச்சிறுவர்களும் சரி பெற்றோர்களும் சரி மறைத்து வாழ்கின்ற ஒரு சூழ்நிலை எமது நாட்டிலும் சரி அன்னிய நாடுகளிலும் சரி காணப்படுகிறது எனலாம். காரணம் நாம் துஸ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டு விட்டோம் என்பதை உணராத சிறுவர்கள் அதனை வெளிப்படுத்தமாட்டார்கள். முக்கியமாக பெற்றோர்கள் தமது பிள்ளை துஸ்பிரயோகத்திற்கு உள்ளாகியமை வெளியில் தெரிந்தால் குடும்ப கௌரவம் இல்லாது போய்விடும் என்ற காரணத்தாலும் இன்று அதிகமாக சிறுவர் துஸ்பிரயோகங்கள் மறைக்கப்பட்டு வருவதனை நாம் அறியக்கூடியதாக உள்ளது.

சிறுவர் துஸ்பிரயோகங்கள் தொடர்பாக ஆரம்பத்தில் சட்ட நடவடிக்கைகள் குறைவாக காணப்பட்ட போதும் இன்றைய நவீன உலகில் பல்வேறு சட்ட நடவடிக்கைகள், தண்டனை முறைகள் கூடுதலாக காணப்பட்டாலும் அது சரிவர அமுல்படுத்தப்படுவதில்லை. எடுத்துக்காட்டாக நாம் எமது நாட்டில் குறிப்பாக யாழ் குடாநாட்டில்

நடைபெற்ற வித்தியாவின் கொலை வழக்கினை எடுத்துக் கொண்டால் குற்றவாளிகள் யார் என அடையாளப்படுத்தப்பட்ட போதும் அவர்களுக்கான தண்டனை இதுவரை காலமும் வழங்கப்படவில்லை. காரணம் எமது நாட்டின் நீதித் துறையின் அலட்சிய போக்கே எனக் கூறிக்கொள்ளலாம்.

சிறுவர் துஸ்பிரயோகங்கள் கூடுதலாக எமது நம்பிக்கைக் குரியவர்களாலே நடத்தப்பட்டு வருவதனை நாம் அறியக் கூடியதாக உள்ளது. அதிலும் குறிப்பாக வயது முதிர்ந்தவர்களினால் அதிகம் சிறுவர்கள் துஸ்பிரயோகங்கத்திற்கு உள்ளாக்கப்படுகின்றனர். இன்றைய காலகட்டத்தில் எவர் மீதும் நாம் அதிக நம்பிக்கையினை வைத்தல் கூடாது. அது எமக்கே பாதகமாக அமையக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தி விடும்.

சிறுவர் துஸ்பிரயோகங்களை தடுப்பதற்கு அரசாங்கத்தினால் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றபொழுதும் அதனை குறைக்க முடியாத ஒரு நிலைமை காணப்படுகிறது. சிறுவர் துஸ்பிரயோகங்களை தடுப்பதற்கான ஒரு முக்கிய வழிமுறையாக விழிப்புணர்வு நடவடிக்கை காணப்படுகிறது. உண்மையில் சிறுவர் துஸ்பிரயோகங்கள் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகள் பல்வேறு இடங்களில் வழங்கப்படுகின்றது. குறிப்பாக சிறுவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் விழிப்புணர்வு வழங்கப்பட வேண்டிய தேவையுள்ளது.

பொருளாதாரத்தின் தேவை அதிகரித்த வண்ணம் காணப்படுகின்ற வேளை பெற்றோர்கள் பிள்ளைகளின் அன்றாட செயற்பாடுகளில் அதிகம் கவனம் செலுத்தாது பொருளாதாரத்தை அதிகரிக்க வேண்டும் என்ற அவாவில் ஓடிய வண்ணம் உள்ளனர். அபிவிருத்தி அடைந்து வரும் உலகில் தொலைபேசி, முகப்புத்தகம், இணையம் என்ற பல்வேறு பாவனையாலும் சிறுவர்கள் ஏமாற்றப்பட்டு துஸ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படுவதனை நாம் அறியக் கூடியதாக உள்ளது. உண்மையில் சிறுவர் துஸ்பிரயோகங்கள் தொடர்பான

விழிப்புணர்வு நடவடிக்கைகள் பெற்றோர்களுக்கு அதிகம் வழங்கப்படும் வேளை சிறுவர் துஸ்பிரயோகங்களை கனிசமான அளவு குறைத்துக் கொள்ளக் கூடிய வாய்ப்புள்ளது என நான் நம்புகிறேன்.

ஒரு சிறுவர் துஸ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டால் எமது சமூகம் அதனை சுட்டிக்காட்டுகின்ற ஒரு நிலை காணப்படுகிறது. உண்மையில் இன்று எமது அயல்வீட்டுப் பிள்ளை துஸ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டுவிட்டது என்றால் அது நாளை எமது பிள்ளைக்கும் நடக்க வாய்ப்பு உள்ளது. எனவே ஒரு பிள்ளை உடல், உளரீதியில் பாதிக்கப்பட்டுவிட்டால் அதனை நாம் சுட்டிக்காட்டாமல் சமூகத்தோடு ஒத்துப் போகுதல் வேண்டும்.


'**இன்றைய சிறுவர்கள் நாளையை தலைவர்கள்**' என்ற கருத்தை அனைவரும் மனதில் கொண்டு சிறுவர்கள் ஒவ்வொரு துறையிலும் இன்று சாதித்து வருகின்ற வேளை அவர்களை மேன்மேலும் ஊக்கப்படுத்தி அவர்கள் மேலும் வளர்ச்சிபெற நாம் கைகொடுக்க வேண்டும்.

உண்மையில் பௌத்தறிவு படைத்த நாம் ஐந்தறிவு படைத்த விலங்குகளைப் போல் செயற்படாமல் சிறுவர்களை எமது இருகண்களைப் போல் நோக்கி அவர் மீதான துஸ்பிரயோகங்களை தடுப்பதற்கு எம்மால் இயன்ற அளவு விழிப்புணர்வுகளையோ? சட்டநடவடிக்கைகளையோ? சரிவர கொண்டு செல்ல முயற்சி செய்தல் வேண்டும்.

ஆக்கம்
உ.உ தர்சினி
3ம் வருடம்
யாழ். பல்கலைக்கழகம்

# வலி.தெற்கு பிரதேச சபை
# பொது நூலகம்
# சுன்னாகம்

## "வாழ்வை வளமாக்க நூலகத்தை நாடுவோம்"



திறந்திருக்கும் நேரம் : காலை 8.00 – மாலை 6.00 மணிவரை

தபால் முகவரி : பெரியமதவடி, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்

இணையத்தளம் : www.chunnakamlibrary.com

மின்னஞ்சல் : chunnakamlibrary50@gmail.com

முகநூல் : chunnakamlibrary valikamam

தொலைபேசி : 021 224 0154

01

## நூல்கள் இரவல் வழங்கும் பகுதி

சேவை நேரம் (காலை 08.00 - மாலை 06.00 மணி வரை)

- பதிவுக் கட்டணம் 20.00
- அங்கத்துவ கட்டணம் 200.00
- அங்கத்துவம் புதுப்பித்தல் கட்டணம் 100.00
- உரிய வகையில் அங்கத்தவராக இணையும் ஒருவர் எமது நூலகத்தின் இப்பகுதியில் காணப்படும் அனைத்து வகை நூல்களையும் இரவலாகப் பெற்று பயனடைய முடியும்.



## சிறுவர் பகுதி

சேவை நேரம் (காலை 09.00 - மாலை 06.00 மணிவரை)

- சிறார்களின் ஆற்றல்கள், திறன்களை வளர்ப்பதற்காக தமிழ், ஆங்கிலம், சிங்கள மொழி நூல்களும், கற்றல் செயற்பாட்டை மேம்படுத்தும் கற்றல் உபகரணங்களும் காணப்படுகின்றன.
- கதைவேளை, சிறுவர் செயற்பாடுகளும் நடைபெறுகின்றன.
- 06 வயது தொடக்கம் 14 வயது வரையான மாணவர்கள் தாம் கல்வி கற்கும் பாடசாலை அதிபரின் சிபார்சுடன் அங்கத்தவராக இணைந்து நூல்களை இரவல் பெற்றுக் கொள்ளலாம்.
- அங்கத்துவ கட்டணம் 20.00





02

## உசாத்துணைப் பகுதி

சேவை நேரம் (காலை 9.00 - மாலை 06.00 மணிவரை)

தம் அறிவுசார் தேடல்களை பூர்த்தி செய்யும் நோக்கில் நூலகத்தை நாடிவரும் வாசகர்களின் உடனடி தேவையை பூர்த்தி செய்யும் நூல்களும், பல்கலைக்கழக ஆராய்ச்சி போன்ற துறைகளுக்கும் பயன்படும் அரிய நூல்களும் இப்பகுதியில் காணப்படுகின்றன.



## பத்திரிகை, சஞ்சிகைப் பகுதி

சேவை நேரம் (காலை 09.00 - மாலை 06.00 மணிவரை)

- நாட்டில் நாளாந்தம், வாராந்தம் வெளிவரும் 15 பத்திரிகைகள் மற்றும் இலங்கை, இந்தியாவிலிருந்து பிரசுரமாகும் 40இற்கும் மேற்பட்ட சஞ்சிகைகள், சிறுபிரசுரங்கள் என்பன காணப்படுகின்றன.





03

## கணனிப் பகுதி

(பிரதி சனிக்கிழமை தோறும் பிற்பகல் 2.00 - 4.00)

வாசகர்கள் தாமு கல்வி நடவடிக்கைக்காக கணனி பயன்படுத்த அனுமதிக்கப்படுகின்றார்கள்.



## கற்றல் பகுதி

சேவை நேரம் (காலை 09.00 - மாலை 06.00 மணி வரை)

* இப்பகுதியை மாணவர்கள், பட்டதாரிகள், வாசகர்கள் ஆகியோர் தம் தொழில்சார், அறிவுசார் வளர்ச்சியின் பொருட்டு நூலகத்தின் இப்பகுதியை பயன்படுத்துகின்றனர். இப்பகுதியில் வாசகர்கள் தாம் கொண்டு வரும் நூல்களை வைத்தே கற்றலில் ஈடுபட முடியும்.



## தொழில்நுட்ப பகுதி

சேவை நேரம் (காலை 09.00 - மாலை 06.00மணி வரை)

* இப்பகுதியில் போட்டோபிரதி, பிரிண்டிங் சேவைகள் நடைபெறுகின்றன.





04

## நூலக சேவைப்பகுதிகள்

* இரவல் வழங்கும் பகுதி
* உசாத்துணைப் பகுதி
* பத்திரிகை சஞ்சிகைப் பகுதி
* சிறுவர் பகுதி
* கற்றல் பகுதி
* தொழில்நுட்ப சேவைப் பகுதி
* கணனிப் பகுதி
* நூலக விரிவாக்கல் சேவைப் பகுதி
* நடமாடும் நூலக சேவை
* பிரதேசம் சார்ந்த தொகுப்பு பகுதி
* ஆவணக் காப்பகம் (ஒட்டுப்புத்தகசேவை)





















05

ஆசானாய் கோலின்றி,
கோபமின்றி போதிக்கும்!

தேர்தல் தந்திடும், தேடவிடாது!
தவறெல்லாம் திருத்திடும்
வன்சொல்லில்லாது..!!

என் உலகாயிருக்கும்
மனிதரேயின்றி போனாலும்
புத்தகம் போதும்
உற்ற நண்பன் போலாதும்...!





ஒரு நல்ல புத்தகம் ஆயிரம்
நண்பர்களுக்கு சமம் ஆனால்
ஒரு நல்ல நண்பன் ஒரு
நூலகத்திற்கு சமமானவன்"

(அப்துல் கலாம்)

" உடலுக்கு எப்படி உடற்பயிற்சியோ
அதுபோல மனப் பயிற்சி புத்தக வாசிப்பு"

(சிக்மண்ட் பிராய்ட்)





ஒரு கோடி ரூபாய் கிடைத்தால்
என்ன செய்வீர்கள் என்று கேட்ட போது
"ஒரு நூலகம் கட்டுவேன்"

(மகாத்மா காந்தி)

06

## வாசிப்பு

## பழக்கமும்

## எமது

## சமூகமும்

"**வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான்**" என்பது ஆன்றோர் வாக்கு. அறிவு சார்ந்த சிந்தனையை உருவாக்குவதற்குப் பரந்த வாசிப்பு அவசியமாகும். தனி மனித வளர்ச்சியில் வாசிப்பின் பங்கு காத்திரமானது. கிரமமான வாசிப்பின் மூலம் அரசியல், சமூகம், சமயம், மருத்துவம், விஞ்ஞானம், வர்த்தகம், கல்வி, விளையாட்டு, பொருளாதாரம், கலை போன்ற பல்வேறு துறைகளிலும் பரந்துபட்ட அறிவைப் பெற முடியும்.

ஆளுமை மிக்க சமூதாயத்தின் பலமான பல்துறை சார்ந்த அறிவை பெற்றுக் கொள்ள உதவும் வாசிப்புப் பழக்கத்தினை ஒரு கலை எனவும் கூறலாம். வாசிப்பு பழக்கத்தினை அதிகரிக்கும் போது சிறந்த நற்சிந்தனைகளும்,கற்பனைகளும் மனதில் ஊற்றெடுக்கும். வாசிப்பு மூலம் மனித மூளைக்கு வேலை கொடுக்கப்படுவதால் மூளையின் செயல் திறன் அதிகரிக்கும் வாய்ப்பு உருவாகும். அத்துடன் தனி மனித ஆளுமையை வளர்க்கும் வகையிலான சிந்திக்கும் திறன், கிரகிக்கும் ஆற்றல் ஆகிய திறன்கள் வாசிப்பதன் மூலம் அதிகரிக்கப்படுவதால் இருள் நிறைந்த வாழ்க்கை கூட ஒளிமயமாகும்.

சுமார் ஐயாயிரம் வருடங்களுக்கு முன்னரிருந்து வந்த குரு குலகல்வி முறையில் பனை ஓலையில் எழுதி வாசிக்கும் வாசிப்புப் பழக்க முறை காணப்பட்டது. இதன் பின்னர் அச்சுப் பதிப்பு முறை கண்டுபிடிக்கப்பட்டது. முதன் முதலாக அச்சுக்கலையைச் சீனர்கள் கண்டுபிடித்தார்கள்.

ஆரம்ப காலகட்டத்தில் செதுக்கப்பட்ட மரத்துண்டுகளில் புத்தகங்கள் அச்சுப் பதிப்புச் செய்யப்பட்டன. பின்னர் தொழில் நுட்ப முன்னேற்றத்தால் அச்சுப் பதிப்புத் துறை பல்வேறு பரிணாமங்களைக் கண்டது.

தற்போதைய 21ம் நூற்றாண்டில் வாசிப்புப் பழக்கம் கணணி, கைத்தொலைபேசி போன்ற நவீன தொழில் நுட்பச் சாதனங்களுக்குள் சுருங்கி விட்டது. இதனால், நூலகம் சென்று வாசிக்கும் பழக்கம் குறைந்து வருகிறது. இன்றைய இளைய தலைமுறையினர் கைத்தொலைபேசி, இணையம், பேஸ்புக், ருவிற்றர் போன்ற நவீன இலத்திரனியல் சாதனங்களின் பாவனையில் அதிக நேரத்தை செலவிடுவதால் வாசிப்புப் பழக்கம் என்பது காற்றில் பறந்த வாக்குறுதி போன்று காணாமற் போய்க் கொண்டிருப்பது கவலைக்குரிய விடயமாகும்.

இன்றைய சூழலில் வாசிப்புப் பழக்கம் மாணவர்கள் மத்தியில் மட்டுமன்றி அனைத்துத் தரப்பினர் மத்தியிலும் அருகி வருவது ஆரோக்கியமான விடயமன்று. பாடசாலைகளிலும், பல்கலைக்கழகங்களிலும், பிரதேச ரீதியாக பொதுநூலகங்கள் காணப்பட்ட போதும் அதனைப் பயன்படுத்தும் மாணவர்களின் எண்ணிக்கை என்பது ஒட்டு மொத்த மாணவர்களும் சில வீதமேயாகும்.

தென்கிழக்காசியாவிலேயே மிகப் பெரும் நூலகம் எனப் பெயர் பெற்றிருந்த யாழ்ப்பாணப் பொது நூலகம் 1981ஆம் ஆண்டிற்குப் பின்னர் அனைத்துலக ரீதியாக அதிகமாக பேசப்பட்ட பெருமைக்குரியது. 97ஆயிரம் வரையான அரிய நூல்களைக் கொண்டிருந்த இந்த நூலகத்தை அக் காலத்தில் யாழ்ப்பாணம் மாத்திரமன்றி வெளிமாவட்டங்களையும் சேர்ந்த ஏராளமான வாசகர்கள் அதிகம் பயன்படுத்தி வந்துள்ளனர்.

விடுமுறை நாளில் காலை நூலகம் சென்றால் மீண்டும் இரவுதான் வீடு திரும்புவோம். நூலகத்திற்குச் சென்றாலே அங்குள்ள பயனுள்ள நூல்களை படித்துவிட்டு மீண்டும் வீடு திரும்ப மனம் இருக்காது. விடுமுறை நாளில் நூலகத்தில் வாசகர் கூட்டம் அலை மோதும்.... அறிவின் பொக்கிஷமான யாழ்ப்பாணப் பொதுநூலகத்தை 1981 ஆம் ஆண்டில் எரித்து சாம்பலாக்கியது. எமது ஒட்டுமொத்த

தமிழ்ச் சமூகத்திற்கு பேரிழப்பு எனத்தெரிவித்தார் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மூத்த கல்வியியலாளர் ஒருவர். யாழ்ப்பாணத் தமிழர்கள் அறிவால் உச்சத்தைத் தொட்டுவிடக் கூடாது எனவும், வரலாற்று உண்மைகள் வெளிவந்து விடக்கூடாது எனவும் நினைத்தவர்கள் தான் நூலகத்திற்கு தீ வைத்தார்கள் எனவும் அவர் வேதனையுடன் தெரிவித்தார்.

கல்வி, கலை, கலாசாரம், பண்பாடு ஆகிய அனைத்திலும் முன்னர் உச்சம் பெற்றிருந்த யாழ்ப்பாணக் கல்விச் சமூகம் இன்றைய காலத்தில் கல்வியில் வீழ்ச்சியடைந்து செல்வதற்குப் பல்வேறு காரணங்கள் கா்ணப்பட்ட போதும் மாணவர்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கம் குன்றி வருவதே பிரதானமான காரணம் எனலாம்.

இன்றைய சூழலில் மாணவர்கள் மத்தியில் மாத்திரமன்றி அனைத்துத் தரப்பினரிடையேயும் வாசிப்புப் பழக்கம் அருகி வருகிறது. இவ்வாறான நிலை தொடர்ந்து நீடித்தால் எதிர்காலத்தில் சிறந்த இலக்கிய வாதிகள், சிறந்த அரசியல் வாதிகள், துறைசார்ந்த புலமையாளர்கள், கல்வியியலாளர்கள், கலைஞர்கள் ஆகியோர் உருவாகுவதில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய வாய்ப்புக்கள் அதிகமிருக்கின்றன.

ஆரம்பப் பிரிவு முதல் மேற்படிப்பு வரை ஆசிரியர்கள் மாணவர்களின் புதிய தேடலுக்கு முக்கியத்துவம் வழங்காமல்

குறிப்புக்களையே மனனம் செய்யுமாறு வற்புறுத்துகின்றனர். எமது நாட்டுப் பரீட்சை முறையும் பாடத் திட்டங்களை மாத்திரம் மையமாகக் கொண்டிருப்பதால் மாணவர்கள் விசாலமான அறிவை பெறுவதற்கு முடியாமலிருக்கின்றது. இந்த நிலை மாற வேண்டும்.

தற்போதைய அரசாங்கம் இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். வாசிப்பு பழக்கத்தை ஊக்கிவிக்கும் பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்துவதும் காலத்தின் தேவையாகும்.

சுன்னாகம் பொதுநூலகம் உள்ளிட்ட நூலகங்கள் சிறுவர்கள் மற்றும் இளையோர் மத்தியில் வாசிப்புப் பழக்கத்தை அதிகரிக்க வேண்டுமென்ற நோக்கில் முன்னெடுத்து வரும் செயற்பாடுகள் வரவேற்புக்குரியவை இவ்வாறான செயற்பாடுகள் மேலும் வலுப்படுத்தப்பட எம்மாலான ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டுடியதும் முக்கியமானது.

வாசிப்பைச் சிரமமானதாகக் கருதாமல் ஒவ்வொருவரும் தங்களின் அன்றாடக் கடமைகளில் ஒன்றாக வாசிப்புப் பழக்கத்தை சேர்த்துக் கொள்ள வேண்டும். அறிவுசார், பண்புசார், வாசிப்புத் தேடலை இழந்து நிற்கும் எங்கள் சமூதாயத்தில் வாசிப்புப் பழக்கத்தை அதிகரிக்கத் தூண்டும் விழிப்புணர்வுத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

வாசிப்புப் பழக்கம் இளைய சமூதாயத்தினரிடம் வளர்த்தெடுக்கப்பட நூலகங்களுடன் பெற்றோர்கள்,ஆசிரியர்கள், சமூக நிறுவனங்கள் என அனைத்துத் தரப்பினரும் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

**கட்டுரையாக்கம் -**

**செல்வநாயகம் ரவிசாந்**

**குப்பிழான்**

# வளரும்போதே அறிவையும் கொஞ்சம் தேடுவோம், வாருங்கள்!

அன்புள்ளங்களே! நீங்கள் பாடசாலை மாணவர்கள். இப்பொழுது பாடசாலையும், பள்ளித்தோழர்களும், படிப்பும், விளையாட்டும், வீட்டுப்பாடமும் என்றே பெரும்பாலான நேரத்தை உங்கள் அன்றாட வாழ்வில் கழித்துக் கொண்டிருக்கிறீர்கள். உங்கள் பெற்றோரும் நீங்கள் வளர்ந்ததும் வைத்தியராகவோ, பொறியியலாளராகவோ, சட்டத்தரணியாகவோ, ஆசிரியராகவோ வரவேண்டும் என்ற கனவோடுதான் உங்களை ஒவ்வொரு நாளும் பாடசாலைக்கு அனுப்பிவைக்கின்றார்கள். உங்களில் பலருக்கும் அது புரிந்திருக்கும்.

உங்களில் சிலர் மற்ற மாணவர்களைவிட அதிகம் அறிந்திருக்கவேண்டும் என்ற ஆர்வத்துடன் இரவு நெடுநேரம் விழித்திருந்தோ, அதிகாலையில் மற்றவர்கள் விழித்தெழுவதற்கு முன்பே விழித்தெழுந்திருந்தோ படித்து வகுப்பில் முதன்மை மாணவர்களாக இருப்பீர்கள். வேறும் சிலர் இத்தகைய வகுப்பறைப் போட்டிகளில் அக்கறைப்படாமலும், ஏதோ பெற்றோரினதும் ஆசிரியரினதும் ஆக்கினை தாங்காமலும் படித்துத்தானே ஆகவேண்டும் என்ற நிலையில் பாடசாலைக்குப் போய் வருவீர்கள். சனி, ஞாயிறு உங்களுக்குக் கொண்டாட்டமாக இருக்கும். சோதினை காலத்தில்தான் கொஞ்சம் வயிற்றைக் கலக்கும்.

காலம் கடந்து போகின்றது. பாடசாலைக்கல்வி, பல்கலைக்கழகக் கல்வி என்று கிட்டத்தட்ட பதினைந்து வருடங்களாக

விழுந்து விழுந்து படித்தபின்னர்நீங்கள் நல்ல நிலையில் சமூகத்தில் அங்கீகாரம்பெற்ற கௌரவமான தொழில்பெற்று வாழுகின்றீர்கள். அதே வேளையில், உங்கள் வகுப்பில் அடிமட்டத்தில் இருந்த உங்கள் வகுப்பறைத் தோழனும் சமூகத்தில் மிக நல்ல நிலையில் வாழ்வதைக் காணும் வாய்ப்பு உங்களுக்கு ஏற்படுகின்றது.

இது எப்படிச் சாத்தியம் என்று நினைக்கின்றீர்கள்? இதனை மேம்போக்காக 'விதி' என்று சொல்லி ஒதுக்கிவிடுவீர்களா? கூடாது. உயர்நிலைக்கு வருவதற்கு அந்த மாணவனுக்கும் ஏதோவொரு வழி கிட்டியுள்ளதல்லவா? இது எப்படிச் சாத்தியம் என்பதற்கு அறிவுபூர்வமானதொரு காரணம் உள்ளது. ஆழமாகச் சிந்தித்தால் அது உங்களுக்குப் புலப்படும். இன்று அதைப்பற்றித் தான் உங்களிடம் பேசப்போகின்றேன். நீங்கள் சிறுவயது முதல் கற்கும் கல்வி பற்றிய ஒரு கோட்பாடு உண்டு. பாடசாலைக் கல்வி, திட்டமிட்ட முறையில் உலக அறிவை உங்களுக்குச் சிறப்பான பாடவிதானத்தின் ஊடாகப் புகட்டுகின்றது.

அதற்காகப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களின்மூலம் அவ்வறிவு படிப்படியாக உங்கள் மூளைக்குச் செலுத்தப்படுகின்றது. வீட்டுப்பாடங்கள் மூலமும், டியுஷன்கள் மூலமும் அவை உங்களால் உரமேற்றப்பட்டு மனதில் இறுக்கமாகப் பதியம்வைக்கப்படுகின்றது. பாடசாலைகளில்,உயர்கல்வி நிறுவனங்களில், பல்கலைக்கழகங்களில் அந்த அறிவு படிப்படியாக விரிவடைந்து உங்கள் வாழ்க்கையைச் செப்பனிட்டு வளர்க்க, முன்னேற மிகவும் உதவுகின்றது.

ஆயினும், கடலெனப் பெருகிவழியும் உலகின் அனைத்து அறிவும் பாடசாலைக்கல்வியின் மூலம் உங்களை வந்தடைவதில்லை.

தேர்ந்தெடுத்த விடயங்களே உங்களுக்குப் பாடநூல்களின் வாயிலாக வழங்கப்படுகின்றன. அதனைச் சற்று அகலமாக உப பாடநூல்கள் உங்களுக்குப் புகட்டுகின்றன. எஞ்சிய அறிவு உங்கள் வாழ்க்கையில் எவ்வாறு வந்து சேர்கின்றது என்பதை நீங்கள் சிந்தித்ததுண்டா?

எனக்குத் தெரிந்ததொரு உதாரணத்தைச் சொல்கிறேன். யாழ்ப்பாணத்தில் புங்குடுதீவில் 'சர்வோதயம்' என்றொரு சமூகத் தொண்டு நிறுவனம் இருக்கிறது. அதன் தாபகர் தான் அமரர் க.திருநாவுக்கரசு. எட்டாம் வகுப்பு வரைதான் அவர் படித்தார். அதன் பின்னர் சமூகசேவைக்காகத் தன்னை முழுவதும் அர்ப்பணித்துவிட்டார். அதன் பின்னர் அவர் கற்றதெல்லாம் அறிஞர்களின் அறிவுநூல்கள் தான். அவர் வாடகைக்கார் சாரதியாகச் சிலகாலம் பணியாற்றினார். வாடகைக்காக மரத்தடியில் அவர் காத்திருக்கும் வேளைகளில் அரட்டை அடிக்காமல் தான் வாங்கிச்சேர்த்த புத்தகங்களை வாசிப்பதில்தான் அவர் செலவிட்டார்.

அவரது வாடகைக்கார் ஒரு நடமாடும் நூலகமாகவே தோற்றமளித்தது. அவரை பின்னாளில் பெல்ஜியம் நாட்டின் அரச குடும்பத்தினர் அழைத்து கௌர வித்திருந்தனர். பள்ளிப்படிப்பை சிறுவயதில் துறந்த அவர் பின்னாளில் 1994இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சுவாமி விவேகானந்தர் விழாவில் கற்றோர் முன்னிலையில் சிறப்புரையாற்றும் வாய்ப்பையும் பெற்றிருந்தார். அவரின் பின்னால் ஒரு காலகட்டத்தில் வட மாகாணத்தின் அரச அதிகாரிகளே திரண்டுநின்று அவரது சமூக வேலைத்திட்டங்களுக்கு ஆதரவு வழங்கினார்கள். இவரது மேடைப் பேச்சுக்கள் மிகவும் தரம் வாய்ந்தவை. பாடசாலையில் கிட்டாத தனது அறிவை

வளர்த்துக்கொள்ள யாழ்பாணப் பொது நூலகமே காரணமாக இருந்தது என்று அக்கடி என்னிடம் கூறிவந்தார்.

அமரர் க.திருநாவுக்கரசு போலவே எம்மத்தியில் பல படிக்காத மேதைகள் வர்த்தக பிரமுகர்களாகவும், சமூக சேவையாளர்களாகவும் சிறந்த மேடைப் பேச்சாளர்களாகவும்,உயர்ந்த நிலையில் வாழ்ந்து மறைந்திருக்கிறார்கள். கூர்ந்து பார்த்தீர்களாக இருந்தால் உங்கள் அயலிலேயே அத்தகைய பலரை உங்களால் இனம்காண முடியும். எப்பொழுதும் அறிவை வளர்க்கும் நோக்குடனேயே நீங்கள் காலையில் கண்விழிக்கவேண்டும். வகுப்பில் முதல் மாணாக்கர்களாக வந்தால் தான் வாழ்வில் ஜெயிக்கலாம் என்றில்லை. வாழ்வில் விடாமுயற்சியுடனும், பரந்த நூல் வாசிப்பு அறிவுடனும் வளர்ந்தால், எவருமே வாழ்வில் உயர்நிலையை அடையலாம் என்ற நம்பிக்கையை நீங்கள் வளர்த்துக்கொள்ளுங்கள்.

இங்கே நான் அறிவென்று குறிப்பிட்டு வருவது பாடநூல் களினாலும், ஆசிரியர்களின் வழிகாட்டுதலாலும் உங்களுக்குக் கிடைக்கும் கல்வி அறிவை மாத்திரம் அல்ல.

அன்றாட கல்விச் செயற்பாடுகளுடன் பரந்ததும் விரிவானதுமானபொதுஅறிவையும் சிறுவயது முதலே கொஞ்சம் கொஞ்சமாகப் பெற்றுக்கொண்டால் தான் நீங்களும் பின்னாளில் மேதைகளாகலாம். வாழ்க்கையில் ஆயிரத்தோடு ஆயிரத்தியொன்றாக எண்ணிக்கையில் மாத்திரம் வாழ்ந்துவிட்டுப் போகாமல், நீங்கள் வளர்ந்ததும் அந்த ஆயிரத்தில் ஒருவராகத் தனித்துவத்துடன் வாழ்ந்து உங்களை நீங்கள் சார்ந்த சமூகம் அதிசயித்துத் திரும்பிப்பார்க்கச் செய்ய என்ன செய்யலாம் என்பதே அடுத்த கேள்வி.

அது தான் "கண்டதும் கற்கப் பண்டிதனாவான்" என்றுளங்கள் முன்னோர்கள் சொன்ன மகாவாக்கியத்தின் அர்த்தமாகும். வாசிப்பு என்பது பாடப்புத்தகங்களைப் படிப்பது மாத்திரமல்ல. சிறுவர் சஞ்சிகைகள், விறுவிறுப்பான நாவல்கள் என்று முதலில் உங்கள் ஆர்வத்தை வாசிப்பில் வளர்த்துக்கொள்ள வேண்டும். அப்படியானதொரு ஆர்வத்தை புத்தகங்களின் பால் செலுத்தினால், பின்னாளில் புத்தகத்தைத் தூக்கியதும் தூக்கம் வரும் நிலை மறைந்துவிடும். இதற்கான பயிற்சியை வாசிப்புப் பழக்கம் உங்களை அறியாமலேயே உங்களுக்கு வழங்கிவிடும். இதன்பின்னர் நீங்கள் ஒருநாளேனும் புத்தகத்தின் துணை இல்லாமல் வாழமுடியாது போய்விடும்.

இன்று இதனை தமிழ்ச் சமூகத்தில் உங்களால் சுதந்திர மாகவும், எளிதாகவும் செய்யமுடியாது போவதற்குப் பல காரணங்கள் உள்ளன. அதனால் தான் இலங்கையில் தமிழர்களிடையே கல்வித்தரத்தில் பின்னடைவும், வாசிப்பின்பால் ஆர்வமின்மையும் தோன்றுகின்றது. வாசிக்க யாரும் முன்வராமையால் நல்ல பல நூல்கள் பரவலாக வெளிவராமல் போய்விடுகின்றன. நூல்கள் வெளிவராமையால் நூல் பதிப்பகங்கள் இலங்கையில் நலிந்துபோய்க் கிடக்கின்றன.

இவை எல்லாம் ஏன் நடக்கின்றன என்று சிந்தியுங்கள். உங்களுக்கு வழிகாட்டிகளாக இருக்கும் ஆசிரியர்களில் பலர், பாடப்புத்தகங்களுக்கு அப்பால் புத்தக வாசிப்பில் ஈடுபாடு காட்டுவது குறைவு. அவர்களே தாங்களாக வாசிக்க விரும்பாதபோது, உங்களை எப்படி நல்ல வாசகராக மாற்றத் துணிவார்கள்? உங்கள் பாடசாலை நூலகத்தில் பணிபுரியும் நூலகரிடம் வாசிப்புப்பழக்கம் இல்லாது

போனால் அவரும் உங்களை வளர்க்க முயற்சி எடுக்கமாட்டார் அல்லவா? நூலகரின் பணி பூதம் புதையலைக் காப்பது போன்று புத்தகங்களைப் பாதுகாத்து வைப்பதல்ல. தனது புனிதப்பணியின் மூலம் குறைந்தபட்சம் சில நல்ல இளம் வாசகர்களையாவது ஆண்டுதோறும் உருவாக்கும் வலிமை அவரிடம் தேங்கிக்கிடக்கின்றது. அதனை இன்றுள்ளபெரும்பாலான நூலகர்களே அறியாதுள்ளனர்.

ஆசிரியர்களையும் நூலகர்களையும் விட மிக முக்கியமான பங்கை உங்கள் பெற்றோரே வகிக்கின்றார்கள். சிறுவயதில் நீங்கள் வீட்டில் குளப்படி செய்தால், அவர்கள் உங்களை ஓரிடத்தில் இருத்தி பாடப்புத்தகத்தைத் திணித்து அசையவிடாமல் இருத்திப் படிக்கவிடுவார்கள். உங்களுக்கு அது தண்டனையாக அமைந்துவிடும். இதுவே காலக்கிரமத்தில் ஒரு புத்தகத்தை வாசிப்பதே தண்டனை என்றாகிவிடும். புத்தகமும் காலக்கிரமத்தில் உங்கள் எதிரியாகிவிடும். பாடப் புத்தகத்தைக் கரைத்துக் குடித்து, நீங்களும் பெரியதொரு பதவியில் தொழில்வாய்ப்பிற்காக அமர்ந்துவிடுவீர்கள். ஆனால், பொது வாசிப்பில் ஏற்படும் இன்பத்தை, பரந்த வாசிப்பு அறிவினால் நீங்கள் பெற்றிருக்கக்கூடிய நட்பை,அந்த அழகிய இனிய உலகத்தைத் தரிசிக்காமலே நீங்கள் முதுமையை அடைந்துவிடுவீர்கள்.

ஒரு வெள்ளிக்கிழமை நீங்கள் அம்மாவின் வேண்டு கோளுக்கிணங்க கோவிலுக்குப் போகிறீர்கள். அங்கே அம்மா நவக்கிரகங்களைச் சுற்றி வலம் வந்து வணங்குகிறார். அவருக்கு நவக்கிரக தோஷமாம். நீங்களும் அம்மாவின் காலடித் தடத்தைப்பற்றி நவக்கிரகங்களைச் சுற்றி வருகிறீர்கள். நீங்கள் ஒரு புத்தகப்பிரியராக இல்லாதிருந்தால் இந்தச் சம்பவம் இத்துடன் நின்று போய்விடும். ஆனால் நீங்களோ ஒரு நல்ல வாசகர். அறிவியல் நூல்களயும்

சிறுவர் நூல்களையும் தேடித்தேடி வாசிப்பவர். பாடசாலையில் அண்டவெளி பற்றிப்படித்தபோது,பூமியையும்,சந்திரனையும், பிற கோளங்களையும் பற்றிப் படித்திருக்கிறீர்கள். போதாக்குறைக்கு எழுத்தாளர் செங்கைஅழியானின் 'சந்திரனின் கதை'என்ற நூலையும் நீங்கள் கருத்தூன்றிப் படித்துமுடித்துவிட்டீர்கள்.

இப்பொழுது அம்மாவுடன் கோவிலுக்குச் சென்று வந்த உங்கள் கதை தொடர்கின்றது. சந்திரனின் கதையில் கலாநிதி குணராசா குறிப்பிடும் கிரகங்களைத்தானே கோவிலில் பக்தி சிரத்தையுடன் அம்மாவுடன் சேர்ந்து சுற்றிவந்திருக்கிறீர்கள்? ஏற்கெனவே வாசித்திருப்பதால் அது பற்றி அம்மாவிடம் விளக்கம் கேட்கிறீர்கள்,அவரிடம் தெளிவான விளக்கத்தைப்பெற முடியவில்லை. அப்பாவிடம், அண்ணாவிடம், ஆசிரியரிடம் என்று பலரிடமும் கேள்விகளைக் கேட்பீர்கள். தெளிவான அறிவியல் கருத்தைப் பெற்றதும்உங்கள் சந்தேகம் தெளிகின்றது. இப்பொழுது புதியதொரு உலகத்தைத் தரிசிக்கத் தொடங்கிவிடுவீர்கள்.

உங்கள் பரந்த வாசிப்பு இதற்கான வழியை உங்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கின்றது. அது உங்களை மேலும்மேலும் புதிய விடயங்களைத் தேடிச்செல்ல வழியமைக்கின்றது. பொதுவாசிப்பு, உங்களைச் சுற்றியுள்ள பல திரைகளை நீக்குகின்றது. தெரிந்ததிலிருந்து தெரியாததைக் கற்கத் தொடங்குவீர்கள். இனிப் புதியதொரு அறிவியல் அணுகுமுறையை உங்கள் சிந்தனை உங்களுக்கு வழங்கும். அது மற்றவர்களிடமிருந்து உங்களை வேறுபடுத்தி,உயர்த்திக்காட்டும். புதிய அறிவோர் வட்டமொன்றினுள் நீங்கள் உள்வாங்கப்படுவீர்கள். அதுவே வாசிப்பின் மகத்துவம்.

இந்தக் கட்டுரையை வாசிக்கும் நீங்கள் ஏற்கெனவே ஒரு நல்ல வாசகராவதற்குரிய பாதையைக் கண்டுகொண்டிருக்கிறீர்கள் என்பதை நான் அறிவேன். இல்லாதுபோனால் இந்தப்பந்தி வரை எனது எழுத்துக்கள் உங்களை வாசிக்கத்தூண்டியிராது. வாசிப்பில் ஏற்பட்டுள்ள ஆர்வமேஉங்களை இக்கட்டுரையின் பால் ஈர்த்துள்ளது. அந்த ஆர்வமே இந்தக் கட்டுரையின் வாயிலாக இலங்கையிலுள்ள உங்களையும் லண்டனிலுள்ள என்னையும் இணைத்திருக்கிறது. என்னைப்போல பலரை உங்கள் வாசிப்பு உலகம் விரைவில் அறிமுகப்படுத்தும். நீங்கள் அறிந்த விடயங்களை புத்தகம் வாசிப்பதில் அக்கறையில்லாத உங்கள் நண்பருக்கு தெரியப்படுத்துங்கள். அவரையும் அந்த நூலை வாசிக்கத் தூண்டுங்கள். இருவரும் வாசித்த ஒரு நூலைப்பற்றி ஆற அமர இருந்து உரையாடுங்கள். அதில் சொல்லப்பட்டவற்றில் எழும் சந்தேகங்களை உங்கள் ஆசிரியருடன் கதைத்துத் தெளிவுபடுத்திக்கொள்ளுங்கள்.

இப்படித்தான் ஒரு நல்ல வாசகன் உலகில் உருவாகுகின்றான். அந்த நல்ல வாசகன் ஏன் நீங்களாக இருக்கக்கூடாது? சிந்தியுங்கள்.

**என். செல்வராஜா.**

**நூலகவியலாளர், லண்டன்**

## *இன்றைய காலகட்டத்தில் நூலகங்கள் எதிர்நோக்கும் சவால்கள்*

நூலகம் தனியே நூல்களை சேமித்து வைக்கும் இடம் என்ற நிலை மாறி பெருகி வரும் தகவல் புரட்சியின் மூலம் நாளாந்தம் வெளிவரும் ஆவணங்கள், தகவல்களின் வருகையை எவ்வாறு தரப்படுத்தி நூலகத்தில் உள்வாங்குவதென்ற பாரிய பொறுப்பு நூலகங்களைச் சார்ந்துள்ளது. இவற்றையெல்லாம் சந்தித்து நூல்கள் நூலுருவற்ற சாதனங்கள் போன்றவற்றை சேகரித்து வாசகர்களுக்கு வழங்கும் முகமாக நூலகங்களில் அவற்றை உள்வாங்கி வைத்திருக்கின்றது.

இவ்வாறான செயற்பாட்டை நூலகங்கள் கடின முயற்சியினால் செய்து முடிக்கும் போது அது தற்போது இன்னொரு சவாலை எதிர்கொள்கின்றது. அது என்னவெனில் வாசகர் பயன்பாடு அருகிவரும் நிலையே. இதற்கு காரணம் பிள்ளைகள் இடையே வாசிப்பு பழக்கம் அருகிவருதல், தொலைபேசி, கணனி, தொலைக்காட்சி போன்றவற்றின் உள்வருகை மற்றும் தனியார் வகுப்புக்கள் போன்றவற்றால் பிள்ளைகள் ஒரு குறுகிய விடயப் பரப்பினுள்ளே தமது கல்வி செயற்பாடுகளை நிறைவு செய்கின்றார்கள். அதற்கு மேலாக பொது விடயப் பரப்பிற்கு அவர்கள் வருவதென்றால் அன்றாடம் தினசரி செய்திதாள்கள், சஞ்சிகைகள் போன்றவற்றை வாசித்தல் வேண்டும் இதற்கு நூலகங்களை பயன் படுத்த அவர்களை பழக்கப்படுத்த வேண்டும். அதற்கு பெற்றோர்களும், ஆசிரியர்களும் அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். பெற்றோர்கள் தமது வேலைகளுக்கு செல்லும் போது அருகில் உள்ள நூலகத்தில் பிள்ளைகளை விட்டு விட்டு தமது வேலை முடிய வந்து கூட்டிச் செல்லாம். ஆசிரியர்கள் பிள்ளைகளுக்கு கொடுக்கும் வேலைகளில் நூலகத்தில் சென்று பார்த்து குறிப்பு எடுத்து வரும்படி கூறலாம். அதனால் பிள்ளைகள் நூலகத்தை பயன்படுத்த ஆரம்பிப்பார்கள் **"தொட்டில் பழக்கம் சுடுகாடு வரைக்கும்"** என்ற பழமொழிக்கு ஏற்ப சிறு வயதில் வாசிக்க தொடங்கினால் அது அவர்களின் பிற்கால படிப்பிற்கு பெரிதும் பயன்படும்.

மேலும் பொற்றோர்கள் பிள்ளைகளை தேவையான குறிப்புக்களை இணையமூலம் தரவிறக்கம் செய்து வழங்குகிறார்கள். அதில் வரும் விடயங்கள் எல்லாம் மிக சரியாததென கொள்ள முடியாது. எனவே பெற்றோர்கள் தமது வேலைப்பளுவின் மத்தியில் நூலகத்திற்கும் அழைத்து செல்வதை பழக்கப்படுத்திக் கொள்ளவேண்டும்.

தொடர்ந்து நூலகர்களின் பங்கினை எடுத்து நோக்குவோமாயின் நூலகங்களில் வாசகர்களின் எண்ணிக்கை குறைவடையுமாயின் அதனை அப்படியே விட்டுவிடாமல் வாசகர் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு நூலக வளங்களை வாசகரை நோக்கி நகர்த்துதல் வேண்டும். அதாவது நடமாடும் சேவை மூலம் நூல்களை முன்பள்ளி, பாடசாலை, சனசமூக நிலையங்களுக்கு எடுத்து சென்று அங்கு ஒரு வாசிப்பு செயற்பாட்டை மேற்கொள்ளல் வேண்டும். அதன் மூலம் வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தி நூலகத்தை பயன்படுத்த அறிவுரை வழங்க வேண்டும். அத்துடன் நூலகத்தில் போட்டிகள், கருத்தரங்குகள், கதைவேளை போன்றவற்றை ஒழுங்கு செய்து வாசகர்களை நூலகத்திற்கு வரச்செய்தல்.

இவ்வாறு நூலகர்கள், நூலக உத்தியோகத்தர்கள், வாசகருடன் நெருங்கிய உறவைப்பேணி அவர்களின் வாசிப்பு பழக்கத்தை அதிரிக்கச் செய்தல் வேண்டும். அதன் மூலம் எதிர்காலத்தில் அறிவு சார்ந்த உலகம் ஒன்றை உருவாக்கிய பங்கு நூலகத்தைச் சென்றடைகின்றது. ஓர் பிரதேச கல்வியறிவுக்கு அப்பிரதேச நூலகங்கள் பெரிதும் பங்களிப்பு செய்ய வேண்டும். அதற்கு சகலரும் நூலகங்கள் வளர பங்களிப்புச் செய்தல் வேண்டும். அறிஞர்கள், எழுத்தாளர்கள், புத்திஜீவிகள் தமது அனுபவங்களை, தமது வெளியீடுகளை நூலகங்களுடன் இணைந்து செய்வதனால் நூலக செயற்பாடுகள் வெளிக்கொணரப்படும். அதன்போது வாசகர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். ஆகவே இன்றைய கால கட்டத்தில் அறிவு சார்ந்த சமூகத்தை உருவாக்கும் பொறுப்பில் நூலகங்களும் பிரதான இடம் வகிக்கின்றது. அதனால் அறிவு வளர நூலகங்களை வளர்ப்போம். ஊர் கூடி ஒன்றாக பயன் பெறுவோம்.

**நூலகர்**

**திருமதி. சு. ஜெயலக்சுமி**

# மரபு வழியான கலைப் பொக்கிஷங்களை ஓவியமாக்கிய பொன்.பசுபதி அவர்களின் ஓவியக் கண்காட்சி

வலி. தெற்கு பிரதேச சபையின் பிரதான பொது நூலகமாக விளங்கும் சுன்னாகம் பொது நூலகமானது, மக்களின் அறிவு சார் தேடல்களைப் பூர்த்தி செய்வதில் தன்னை அர்ப்பணிக்கின்றது. சிறுவர் முதல் முதியோர் வரை அவர்களுக்குத் தேவையான பாடந்தரங்களையும், பயன்பாடுகளையும், கட்புல செவிப்புலச் சாதனங்களையும் உரியவாறு உரிய நேரத்தில் முன்வைத்து நிறைவேற்றுவதில் இந்நூலகம் வெற்றி பெறுகின்றது. அந்தவகையில் இலை மறைகாயாக இருந்த ஒரு மாபெரும் ஓவிய சித்திர சிற்பக் கலைஞனை இனங்கண்டு, அவரை வெளிக் கொணர்ந்து, அவரது சகல படைப்புக்களையும் பொது மக்கள் கண்டு களித்து பசியாற வைத்த நிகழ்வு ஒரு சாதனையாகின்றது. இது ஒரு முன்மாதிரியான விழிப்புணர்வு செயற்பாடாகும். இந்நூலகப் பொறுப்பாளரான திருமதி. ஜெயலக்சுமி சுதர்சன் அவர்களும், அங்கு கடமையாற்றும் ஏனைய ஊழியர்களும் வாசகர்களதும் நேயர்களதும் மனங் கொள்ளுமாறு கலை வடிவங்களை உயிரூட்டியிருப்பது உச்சம் பெறுகிறது. அத்தகு கலை வனப்புகளில் கண்களை கொல்லையடித்த பல ஓவிய படைப்புக்களை மெய்சிலிர்க்க வைத்து உச்சம் தொட வைக்கின்றார் கந்தரோடையில் பௌர்ணமியாக விளங்கும் **திரு பொன். பசுபதி அவர்கள்.**

மும்மொழி தேர்ச்சியும், செம்மொழி வல்லமையும், தம்வழி ஆய்வுகளையும் எம்வழி நின்று மரபு காத்த ஒப்புரவாளரோ கலாபூஷணம் பொன். பசுபதி என்ற பண்பாளர் ஆவார். இவர் ஒரு இளைப்பாறிய அரச ஊழியராவர். கதைக்கப் பேச உரையாட பேட்டி காண அனுபவம் பகிர மிகவும் இனிமையானவர். பொதுவாகவே கலைஞர்கள் வரப்பிரசாதமானவர்கள். வரமானவர்களும் கூட! இவ்விரண்டு அம்சங்களையும் இவரது அறுபது படைப்புக்களிலும் காணவும் இரசிக்கவும் முடிந்தது.

**மரபு வழியானவை**

உள்ளதை உள்ளபடி உபகாரம் செய்வதோடு மட்டுமல்லாமல் உணர்ச்சி

பொங்க உயிரூட்டுவதே ஓவியங்களினதும் சிறப்பம்சமாகும். அதை இங்கே காணமுடிந்தது.

“மோகன ஓவியம் நீ படைத்தாய் எந்தன்
மோகத்தைதத் தூண்டியே காதல் தந்தாய்
தாகமும் கொண்டேன் நான் தழுவி அணைத்திடவே
வேகமாய் வாராயோ வேளையில் ஓவியனே”

காட்சிக்கு வைக்கப்பட்ட அனைத்து ஓவியப் படைப்புக்களையும் ஆற அமர இருந்து தேற சுமார் இரண்டு மணித்தியாலங்கள் போதாமையாக இருந்தன. காரணம் ஒவ்வொரு காட்சியிலும் திவ்விய மாட்சி காணப்பட்டன.

**பேசிய விந்தை**

ஒரு ஞானியின் வடிவம். அது ஒரு மெஞ்ஞானியோ விஞ்ஞானியோ யாமறியோம். அவரது தலைப் பகுதிக்குள் வேகமாக சீறிப் பாயும் குதிரை! அதனைச் செலுத்தும் பாகன்! பறக்கும் ஒரு பறவை! பாகனின் முழங்கையில் முகரும் பாகனின் அதிர்வு ஞானியின் மூக்காகிறது! பறவையின் இறகு ஞானிக்கு முடியாகி நரையாகிறது, ஞானியின் தலை வானத்ததையே வசமாக்குகிறது. அற்புதமான அதிசயமான ஆழ்ந்த கருத்துடைய ஓவியம். இதற்கு ஒரு பதக்கம் கொடுக்கலாம்.

மற்றும் கந்தரோடை கயற்கண்ணியின் வியாபகம், வரலாற்றினை சிந்திக்க வைக்கிறது.

சுனாமியின் அகோரமும் அனர்த்தமும் அச்சம் கொள்ள வைக்கிறது. பலே!

ஆற்றோரம் நீரோடும் மங்கையின் இளமையும், கனவும், பளிச்சிடுகிறது.

முட்டிமோதும் எருத்துக்கள் எமது குருதியைச் சிந்திக்கண்ட வைக்கிறது. எருதுக்குரிய மரபு இழையோடுகிறது.

1927 ஆம் ஆண்டில் மகாத்மாகாந்தியின் ‘கந்தரோடைதரிசனம்’ வியக்க வைக்கிறது. ஒரு முறை வணங்கலாம்.

மணிக் கூட்டுக் கோபுரம் பிரம்மாதம். நேரம் பார்க்கலாம்.

தனிக் காட்டு ராஜாபோல யானை அள்ளிக் கொட்டித் தெளித்து குளிக்கும் போது நாமும் நனைந்து உடைகளை உலர வைக்கின்றோம்.

வாழ்க்கைப்படகு ஒன்று கடலில் தத்தளிக்கின்றது. எனக்கு நீந்த முடியவில்லையே என்று கவலை கொண்டேன். என்னையும் கீறியிருந்தால்!?

கிராமியம், துலா, பட்டை, விவசாயிஇறைப்பு, கோவனக்கட்டு அடேயப்பா! இரசிக்கலாம்!

மாட்டுவண்டிச் சவாரிக்குப் போற மாதிரியாக, நானும் வண்டிலில் ஏறிக் கொண்டேன். ஓவியர் ஓடி வந்து என்னை இறக்கிவிட்டார்.

பனங்கள் புளித்து விட்டது போலும் 'பிளா' என்ன குற்றம் செய்ததோ பாவம்!

பிளாவுக்குள் தலை அளாவியபடி கள்ளு அவரை
விழுங்கியது அவரை மட்டுமா? எம்மையும் தான்! சற்று
தளம்பி விட்டேன் வெறி தலைக்கேறியதோ என்னவோ
இருந்துவிட்டேன் ஓவியர் பசுபதி என்னைக் காப்பாற்றிக் கொண்டார். காட்டுப் பன்னத்தடியால் செதுக்கிய றெஜிபோம் சிற்பங்கள் மூன்றும் (கொக்கு, கழுகு, குதிரைவீரன்) ரொம்ப பிரம்மாமதமாய் எம்மோடு கூடிக் குலாவி மகிழ்ந்தன. கொக்கும் கழுகும் எம்மைக் கண்டு பறந்தன. ஆனால் பசுபதியாரோ தூரப் பறக்காதபடி தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிட்டார்.

ஓடமும் ஒரு நாள் வண்டியில் ஏறும்.
வண்டியும் ஒரு நாள் ஓடத்தில் ஏறும்.
இதனை மிகவும் தத்துவரூபமாகச் சித்தரித்திருக்கின்றார். எழுத்திலே வடிப்பதிலும் பார்க்க காட்சியிலே உயிரூட்டி பசியாறியுள்ளமையே எழுத்தாளர்களைக் கவனிக்கச் செய்துள்ளது.

தானும் மனைவியும் இல்லற மான்மியத்தில் பயணிக்கும் ஒரு குடும்பமாக இருப்பதனால் போலும் தம்மையே எமக்கு பரிசாக்கியிருக்கின்றார்கள். அப்பரிசானது எம்மை வரவேற்கிறது. கொலுவாக ஏற்று மகிழ முடிகிறது. அதிசயமாகிறது.

நிறைவாக, ஓவியர் பசுபதி அவர்கள் வலி தெற்குக்கு மாத்திரமல்ல நாடு முழுவதுமாக உச்சரிக்கப்படும் ஒரு மரபுவழிபேணும் ஓவிய சித்திர சிற்பக்கலைஞராக வெல்லப்படுகின்றார். வலி தெற்கு சுன்னாகம் பொதுநூலகம் அரவணைத்து ஓவியங்களைப் பேறாக்கியமை அதன் பாக்கியமேயாகும். அடுத்தது எப்போது?

ஆக்கம்
கே.எஸ்.சிவஞானராசா

# 1978 ம் ஆண்டு இலங்கை அரசியலமைப்பின் 19 ஆவது அரசியல் அமைப்பு திருத்தம்

தெற்காசியாவில் புவியியல் ரீதியாக கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் நிலைகொண்டிருக்கும் இலங்கைத் தீவினது அரசியற்திட்ட வளர்ச்சியானது பிரித்தானியரின் காலணித்துவ ஆட்சியில் ஆரம்பமாகி சுதந்திர இலங்கையில் இரண்டாம் குடியரசு யாப்பு வரை பரிமாணம் அடைந்துள்ளது. பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் கோல்புறூக் - கமரூன் அரசியல் சீர்திருத்தத்தில் தொடங்கி தற்போது நடைமுறையிலுள்ள இரண்டாம் குடியரசுயாப்பு என்ற வகையில் வளர்ச்சியடைந்துள்ளது.

தற்போதைய அரசியல் திட்டமானது 5∴6 என்ற மிகப்பெரிய பெரும்பாண்மை பலத்துடன் ஆட்சிக்கு வந்த து.சு.ஜெயவர்த்தனாவினால் உருவாக்கப்பட்டு நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது. "ஜனநாயக சோசலிசம்" என்ற கருத்தியலுடன் வடிவமைக்கப்பட்டது. அதன் பின்னர் காலத்திற்கு காலம் பல்வேறு திருத்தங்களை தன்னகத்தினுள் உட்கொண்டு சிறிய சிறிய மாற்றங்களை ஏற்படுத்தி இன்றுவரை செயற்பட்டுக் கொண்டு செயற்படுத்தப்பட்டுக் கொண்டு இருக்கின்றது.

2015ம் ஆண்டு மே மாதம் 15ம் திகதி கொண்டுவரப்பட்ட 19வது அரசியலமைப்பு திருத்தமே இன்று வரை மேற்கொள்ளப்பட்டுள்ள இறுதி திருத்தமாகும். நல்லாட்சியினை ஏற்படுத்துதல் என்ற கோசத்துடன் ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவின் ஆட்சியில் இத்திருத்தம் கொண்டு வரப்பட்டது. நல்லாட்சிக்குரிய ஜனநாயக பண்புகள் என்ற அறிக்கையுடன் இத்திருத்தம் உருவாக்கப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்டது. 2019 நவம்பர் மாதம் 16ம் திகதி மீண்டும் ஒரு தேர்தல் நடாத்தப்படவுள்ளது.

இதன்படி இத்திருத்தத்ததின் முக்கியமான அம்சங்களை பின்வருமாறு சுருக்கமாக பரிசீலிக்க முடியும்.

இந்த வகையில் இத்திருத்தத்தின் முக்கியமான ஒரு விடயம் 14ம் உறுப்புரையின் "அ" பகுதியில் குறிப்பிட்டுள்ள "தகவலை பெற

அணுகுவதற்கான உரிமை" என்னும் பகுதியாகும். இதன்படி ஒவ்வொரு பிரஜையும், பிரஜையொருவரின் உரிமைகளை பிரயோகிப்பதற்கு ∴ பாதுகாப்பதற்கு தேவைப்படுவதும், பின்வருபவர்களினால் வைத்திருக்கப்படுவதுமான, தகவலாகவுள்ளதுமான ஏதேனும் தகவலை சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக பெற அணுகுவதற்கான உரிமையினை கொண்டிருத்தல் வேண்டும். அதன்படி

(அ) அரசினால், அமைச்சினால் அல்லது ஏதேனும் அரசாங்க திணைக்களத்தால் அல்லது ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட ஏதேனும் சட்டக்குழு.

(ஆ) மாகாணமொன்றின் அமைச்சர்கள் சபையின் அமைச்சர் ஒருவரது ஏதேனும் அமைச்சு அல்லது மாகாணசபையொன்றின் நியதித்திட்டத்தினால் ஸ்தாபிக்கப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட ஏதேனும் சட்டக்குழு.

(இ) ஏதேனும் உள்;ராட்சி அதிகாரசபை

(ஈ) அ, ஆ அல்லது இ என்னும் உட்பந்தியில் குறிப்பிடப்படும் நிறுவனமொன்று தொடர்பில் அத்தகைய ஏதேனும் தகவலை உடமையில் வைத்திருக்கும் ஏதேனும் ஒரு ஆள்.

மேற்கூறியவர்களிடமிருந்து சட்டத்திற்கமைய தகவலை பெறும் உரிமை பிரஜைகளிற்கு உண்டு.

19ம் திருத்தத்தில் மற்றோர் முக்கியமான விடயம் குடியரசு ஜனாதிபதி பற்றிய விடயமாகும். இதன்படி 30ம் உறுப்புரைக்கு பதிலாக பின்வரும் விடயங்கள் முதன்மை பெற்று உள்ளடக்கப்பட்டது.

1. 30 (1) உறுப்புரை இலங்கை குடியரசு ஜனாதிபதி ஒருவரை கொண்டிருக்க வேண்டும். அவரே அரசின் தலைவர், ஆட்சித்துறையின் தலைவர், அரசாங்கத்தின் தலைவர், ஆயுதம் தாங்கிய படைகளின் தலைவர் என்றும்.

2. 30 (2) உறுப்புரை குடியரசு ஜனாதிபதி மக்களால் தேர்ந்தெடுக்கப்படல் வேண்டும் என்பதுடன் ஐந்து வருட காலத்திற்கு பதவி வகித்தல் வேண்டும் என்றும்.

3. 31 (2) உறுப்புரை ஜனாதிபதி பதவிக்கு மக்களால் இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஆள் எவரும் அதன் பின்னர் அத்தகைய பதவிக்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்படலாகாது என்றும்.

4. 33 (அ) உறுப்புரை ஜனாதிபதி பாராளுமன்றத்திற்கு பொறுப்புக்கூறுதல் வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனூடாக இதுவரை காலமும் ஜனாதிபதி பதவியின் அமைப்பு முறையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதனை அவதானிக்கலாம்.

19ம் திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள மற்றோர் விடயமாக "அரசியலமைப்பு பேரவை" யை குறிப்பிடலாம். ஏற்கனவே 17ஆம் திருத்தத்தில் இந்நிறுவனம் இருந்ததுடன் 18ம் திருத்தத்தில் அது "பாராளுமன்ற பேரவை" என மாற்றப்பட்டு மீண்டும் இத்திருத்தத்தில் "அரசியலமைப்ப பேரவை" என்று உருவாக்கப்பட்டுள்ளது. இவ் நிறுவனம் பற்றி யாப்பின் ஏஐஐ அத்தியாயம் குறிப்பிடுகின்றது. இதன்படி,

அரசியலமைப்பு பேரவையானது பிரதமர், சபாநாயகர், எதிர்கட்சித்தலைவர், ஜனாதிபதியால் நியமிக்கப்படும் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், பிரதமரும் எதிர்கட்சி தலைவரினதும் சிபாரிசின் படி ஜனாதிபதியால் நியமிக்கப்படும் 05 பேர், பிரதமர் மற்றும் எதிர்கட்சி தலைவரின் கட்சி அல்லாத பாராளுமன்றின் பெரும்பான்மையோரின் ஆதரவைப் பெற்ற ஒருவர் என்ற வகையில் பத்து உறுப்பினர்கள் அங்கத்துவம் பெறுகின்றனர்.

அரசியலமைப்பு பேரவையின் தலைவர் சபாநாயகர் ஆவார். இங்கு பிரதமரும், எதிர்கட்சித் தலைவரும் சிபாரிசு செய்ய ஜனாதிபதியால் நியமிக்கப்படும் 05 பேரில் மூவர் வெளியாட்களாக பாராளுமன்றின் சம்மதம் பெற்றவர்களாக இருக்க வேண்டும்.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டாலும் இது தொடர்ந்தும் செயற்படும். இதனுடைய பதவிக்காலம் மூன்றாண்டுகளாகும். பேரவையால் நியமிக்கப்படும் ஒருவர் 05 வருட காலத்திற்கென செயலாளர் நாயமாக நியமிக்கப்படுவார்.

அரசியலமைப்பு பேரவையானது குறைந்தபட்சம் ஒவ்வொரு மாதமும் இரண்டு தடவைகள் கூட்டப்பட வேண்டும். பேரவையின் கூட்ட நடப்பெண் 05 ஆகும். பேரவையின் தீர்மான முடிவிற்கு குறைந்தபட்சம் 05 பேரின் ஆதரவு அவசியமாகும்.

பேரவைக்கு தவிசாளர் தலைமை தாங்க வேண்டும். அல்லாவிடின் பிரதம அமைச்சர். அவர் இல்லாவிட்டால் எதிர்கட்சித்தலைவர் தலைமை தாங்க வேண்டும். பேரவையின் செயற்பாடுகள் தொடர்பாக 03 மாதத்திற்கு ஒரு தடவை ஜனாதிபதிக்கு அறிக்கை சமர்பிக்க வேண்டும்.

அரசியலமைப்பு பேரவையின் செயற்பாடுகள் பின்வரும் இரண்டு அடிப்படையில் காணப்படுகின்றது.

1) பின்வரும் ஆணைக்குழுக்களிற்கு ஜனாதிபதி ஆட்களை நியமிக்கும் போது அதற்கு விதப்புரை செய்தல்.

1. தேர்தல் ஆணைக்குழு
2. பகிரங்கசேவை ஆணைக்குழு
3. தேசிய பொலிஸ் ஆணைக்குழு
4. கணக்காய்வு சேவை ஆணைக்குழு
5. இலங்கை மனிதஉரிமை ஆணைக்குழு
6. இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு
7. எல்லை நிர்ணய ஆணைக்குழு
8. நிதி ஆணைக்குழு
9. தேசிய பெறுகை ஆணைக்குழு

2) ஜனாதிபதி பின்வரும் ஆட்களை நியமிக்கும் போது அதற்கு அனுமதி வழங்கல்.

- அட்டவணை பாகம் I

    1. பிரதமநீதியரசரும் உயர்நீதிமன்றமும் நீதிபதிகளும்

    2. மேன்முறையீட்டு நீதிமன்ற தலைவரும் நீதிபதிகளும்

    3. தவிசாளர் தவிர்ந்த நீதிச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்

- பாகம் II

    1. சட்டமா அதிபர்

    2. கணக்காய்வாளர் நாயகம்

    3. பொலிஸ்மா அதிபர்

    4. ஒம்புட்ஸ்மன்

    5. பாராளுமன்ற செயலாளர் நாயகம்

அரசியலமைப்பு பேரவையானது ஜனாதிபதி தன்னிச்சையாக பதவிகளிற்கு ஆட்களை நியமிக்கும் அதிகாரத்தை வரையறை செய்வதற்கான நோக்கமாகவே ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

மேலும் 19 வது திருத்தத்தின் மூலம் பாராளுமன்றின் பதவிக்காலம் 05 வருடங்களாக அமைவதுடன் 4 ½வருடம் முடியவே ஜனாதிபதியால் கலைக்கப்பட முடியும் என்பதுடன் அதற்கு முன்னர் கலைக்கப்பட வேண்டுமாயின் 2.'.3 பெரும்பான்மை பலம் அவசியமாகும். அத்துடன் அமைச்சரவை எண்ணிக்கை வரையறை, ஜனாதிபதி மீதான அடிப்படை உரிமை வழக்கு தாக்கல், சட்டமூலம் 14 நாட்களிற்கு முன்னர் வர்த்தகமானியில் பிரசுரித்தல் வேண்டும் போன்ற விடயங்கள் 19ம் அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு உருவாக்கப்பட்டுள்ள 19வது திருத்தச்சட்டம் உள்ளடக்கியிருக்கும் விடயங்கள் நடைமுறையில் ஓர் ஜனநாயக முறைமையை இலங்கையில் உருவாக்கும் என்பது ஓர் கேள்விக்குறியே? காரணம் ஜனாதிபதியின் உச்சபட்ச அதிகாரமும் அத்துடன் இலங்கையின் தற்போதைய நிலமைகள் ஆட்சியாளர்கள் தங்களின் இடத்திற்கேற்ப யாப்பினை பயன்படுத்துவதனால் எதிர்காலத்தில் இத்திருத்தம் கூட இல்லாமல் போகலாம். இதுவே இலங்கையின் தற்போதைய யதார்த்த நிலமையாகும்.

**தே. திருமுருகராஜன்** J.P(W.I)S.L.T.S -I

யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

---

**"ஒரு நல்ல புத்தகம் ஆயிரம்**

**நண்பர்களுக்கு சமம் ஆனால்**

**ஒரு நல்ல நண்பன் ஒரு**

**நூலகத்துக்கு சமமானவன்"**


**அத்துல் கலாம்**


## நூலக ஊர்தி பவனி











## கந்தரோடை
## திரு. பொன். பசுபதி
## அவர்களின்
## ஓவிய , சிற்ப கண்காட்சி





## முன்பள்ளி, பாடசாலை
## மாணவர்களின் நூலக தரிசிப்பு







## குமரன் புத்தக இல்லத்தினரின் நூல் கண்காட்சி









சுன்னாகம் பேருந்து நிலையத்தில் பத்திரிகைப் பகுதி ஆரம்பம் 03-10-2019






வாணி விழா இசைச்கச்சேரி



சர்வதேச சிறுவர் தின நிகழ்வு



## ஆர்க் மனவளரச்சிப் பாடசாலையில்
## நடமாடும் சேவையும் சிறுவர் மகிழ்களமும்







ஜனாதிபதி செயலணியின் உடுவில் பிரதேச செயலக
சிறுவர் சங்கம நிகழ்வு எமது நூலகத்தில்





# லக்ஸ்மி ரேட் சென்ரர்

**மொத்த, சில்லறை பலசரக்கு விற்பனையாளர்**





**அனைத்துவிதமான பலசரக்குப்
பொருட்களையும் எம்மிடம் மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.**

**T.P : 021 224 2080**
**Mobile : 077 668 1670**

# லக்ஸ்மி ரேட் சென்ரர்

## இல. 31, கே. கே. எஸ். வீதி,
## சுன்னாகம்.

# எக்ஸலண்ட் புடவையகம்

## இல.59, கே. கே. எஸ். வீதி,

## சுன்னாகம்.



**அனைவருக்குமான சகல ஆடைத்**

**தெரிவுகளுக்கும் நீங்கள் நாட வேண்டிய**

**ஒரே இடம்.**

# எக்ஸலண்ட் புடவையகம்

# கண்ணன் களஞ்சியம்

## பலசரக்கு விற்பனையாளர்







**சகல விதமான பலசரக்குப் பொருட்களையும் தரமாக நீங்கள் பெற்றுக் கொள்ள எம்மை நாடுங்கள்**

தொலைபேசி இல : **077 224 7522**

*கண்ணன் களஞ்சியம்*

**கே.கே.எஸ்.வீதி,**

**சுன்னாகம்.**

# ரஞ்சனாஸ் புடவையகம்



**மிகக் குறைந்த விலையில் மனங்கவரும்**

**ஆடைகள் ................**

**சுபமுகூர்த்தப் பட்டுக்கள்/**

**ஆண்கள் மற்றும் பெண்களுக்கான**

**ரெடிமேட் ஆடைகள்/ டிசைனர் சாரீஸ்/**

**குழந்தைகளுக்கான ரெடிமேட் சுடிதார்**

**T.P : 021 224 0278**

## இல: 4A, மத்திய சந்தை

## சுன்னாகம்.



# குயின்ஸ் பார்க்

## (புடவையகம்)

நவநாகரீக ஆடைத்

தெரிவுகளுக்கு

நாடவேண்டிய இடம் ......

இல : 19, சந்தை தெற்கு வீதி,

சுன்னாகம்.

T.P : 077 666 8009

# சேல்ஸ் கோர்ணர்



## (புடவையகம்)

எல்லா வகையான

ஆடைத்

தெரிவுகளுக்கும்

நாடவேண்டிய இடம் ......



இல: 01, பஸ் நிலையம்,

சுன்னாகம்.

T.P : 077 666 8009

# சுமங்கலி சில்க்



தாராளமான இடம்! ஏராளமான டிசைன்ஸ்!!

உங்களுக்காகவே ........



T.P : 021 224 0001
Mobile : 077 633 4467

# சுமங்கலி சில்க்

இல: 05, புதிய சந்தை,

சுன்னாகம்.





